# யுத்த மேகங்கள்

அல்லது

## வல்லரசுகளின் தற்கால நிலை

எழுளூர் R. நாராயணஸ்வாமி அய்யர்

இயற்றியது

"சங்கு புத்தகசாலை"

12, ஆண்டர்ஸன் தெரு,

ஜி. டி., மதராஸ்.

1937.

காபி ரைட்]

விலை 0—2—6

அ.ரு. ~~74~~
73.

~~2939~~

4640

PRESENTED BY:
V. PR. PL. M.
[illegible]ANATHAN [illegible]
PAGANERI.

அ. 74

# யுத்த மேகங்கள்

அல்லது

## வல்லரசுகளின் தற்கால நிலை

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

MAY 1938

எழுத்தாளர் R. நாராயணஸ்வாமி அய்யர்

இயற்றியது

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

திருவள்ளுவர் நூல் நிலையம்

"சங்கு புத்தகசாலை"
12, ஆண்டர்ஸன் தெரு,
ஜி. டி., மதராஸ்.

1937.

காபி ரைட்] விலை 0—2—6

# முன்னுரை

உலகமெங்கும் யுத்த பயம் நிறைந்திருக்கிறது. யுத்தம் வராமல் தடை செய்யும் முயற்சிகள் பயன்படவில்லை. இவ் வேளையில் வல்லரசுகளின் பலமும், மனப்போக்கும் தெரிந்து கொள்ளப் பலர் விரும்புவர். அதற்காக நிலையைச் சுருக்க மாக இங்கு வெளியிடுகிறோம். இதையுணர்ந்த பின்னர் சமாசாரப் பத்திரிகைகளிலிருந்து யுத்தச் செய்திகளைத் திரட்டி வந்தால் வளரும் நிலையும் விளங்கும். பரிபூர்ண சுதந்திரம் அடைவது மாத்திரமே ஒரு தேசத்திற்குப் போ தாது. அந்நிய நாடுகளின் சூழ்ச்சிகளை வென்று தப்ப வழி தேடும் சக்தியே உண்மைச் சுதந்திரம் என்றறியலாம். ஒரு தேசம் எந்த நிலையில் இருந்தாலும் அந்த நிலையை உபயோ கிக்கவல்ல திறமை மிக்க ராஜதந்திரிகளே நாட்டின் முதல் பலமென்றறிவோம்.

R. நாராயணஸ்வாமி அய்யர்.

# யுத்த மேகங்கள்

## அல்லது

# வல்லரசுகளின் தற்கால நிலை

---

### ஐரோப்பிய யுத்தத்திற்குப் பின்

சிறிது காலம் அபிசீனியா தேசம் உலகத்தைக் கவர்ந்தது. சிஞர் முஸோலினி அதை விழுங்கியதாகத் தாமே பறை சாற்றியபின் ஹிட்லரும் நைன்லாந்தும் எல்லோர் கவனத்தையும் இழுத்தனர். இப்போது ஸ்பெயின் தேசத்துப் பிரஜா யுத்தம் கடுமையாக நடக்கிறது. இதைப்பற்றிய பேச்சே எங்கும் முழக்கம்.

இவற்றுள் ஒவ்வொன்றும் உலக யுத்தத்திற்குக் காரணமாகுமென அந்தந்தக் காலங்களில் வதந்திகள் பரவின. எது எங்கே நடந்தாலும் நடக்காமலிருந்தாலும் வல்லரசுகளுக்குள் ஒரு யுத்தம் நடந்தே தீரும் என்பது பல அறிஞரும் அனுமானிக்கத்தக்கது. சர்வதேச அரசியல் உலகில் இப்போதுள்ள நிலை யுத்தத்திற்கே வழி காட்டுகிறது.

1914ம் வருஷத்திற்கு முன் ஐரோப்பாவிலுள்ள வல்லரசுகள் போட்டி போட்டுக்கொண்டு யுத்த தளவாடங்களை விர்த்தி செய்து வந்தன. யுத்த வெறி அக்காலத்தில் பல தேசங்களுக்கும் இருந்தது. ஸெர்வியாவில் நடந்த ஒரு சிறு விஷயம் மிகப்பெரிய யுத்தத்திற்குக் காரணமாகியது. அதைப்போல் யுத்தம் இப்போதும் ஏற்படலாம். எல்லா வல்லரசுகளும் யுத்த தளவாடங்களை மிதமிஞ்சிப் பெருக்கிக் கொண்டு வரும் வரையில் எங்கேயாவது வெடித்துத்தான்

தீரும். சமாதான முறையில் ஆயுதக் குறைவிற்கு வழி ஏற்பட்டாலன்றி யுத்தம் வந்தே தீரும்.

சமாதானம் ஏற்பட வழி உண்டு என்று கனவிலும் நினைக்கமுடியாது போலிருக்கிறதே! ஆம், அவ்விதம் நிலைமை முதிர்ச்சி பெற்று நிற்கிறது. ஆனால் ஒரு ரகஸ்யம் அறியத்தக்கது. 1914ல் முக்கிய வல்லரசுகள் யுத்தத்தை வலுவில் விரும்பி அதற்குத் தயார் செய்தன. பிரான்சு ஜர்மனியை ஒழிக்க விரும்பியது. அதுபோல் ஜர்மனியும் நினைத்தது. மற்றவை இவற்றிற்குத் துணை செய்தன. இப்போது நிலைமை வேறு. அநேகமாக எல்லா தேசங்களும் தற்காப்பை அதிகம் கவனிக்க வேண்டியதாயிற்று. இதற்காகவே ஏராளமாகச் செலவு; இச்செலவு தாங்கமுடியாமல் வடிமடைபோல் யுத்தம் ஏற்பட்டுவிடும்.

இச்சிறு நூலில் ஐரோப்பிய யுத்தத்திற்குப் பின் ஏற்பட்டுள்ள வல்லரசுகளின் லட்சியங்களையும் நிலைமைகளையும் சுருக்கமாக விளக்க முயற்சிப்போம். மகாயுத்தம் நடந்தபோது "இனி யுத்தம் ஏற்படாமல் தடை செய்யும் நோக்கம்" விளக்கப்பட்டது. அதுவே லட்சியமென்று பலர் நம்பினார்கள். ஆனால் எண்ணம் வஞ்சனையாகிவிட்டது, சூழ்ச்சிகள் பெருகிவிட்டன.

அமெரிக்க பிரஸிடெண்டு வில்ஸன் 1918 ஜனவரி 8ந் தேதி (அமெரிக்கா) காங்கிரஸுக்கு விடுத்த 14 குறிப்புகள், பிறகு அவர் பேசிய பேச்சுகள், பிப்ரவரி 11ல் அவர் வெளியிட்ட கொள்கைகள், அதே வருஷம் செப்டம்பர் மாதம் 17ந் தேதி அவர் பேசியது ஆகிய எல்லாம் அடிப்படையாக அமைந்திருக்கவேண்டும். அப்போதுதான் சமாதானம் உலகில் நிலைத்து யுத்த பயம் முற்றிலும் நீங்கியிருக்கும்.

ஆனால் அப்போது நடந்ததென்ன? பிரஸிடெண்டு வில்ஸனுடைய நியாயமான கொள்கைகளை அனுசரிக்கும் நோக்கத்துடன் சர்வதேச சங்கத்தை ஸ்தாபிக்க விரும்பினார்கள். உலகில், ஐரோப்பிய நாகரிகத்தையுடைய தேசங்கள் யுத்த

யின்றிச் சமாதானமாக வாழவேண்டுமென்னும் நினைப்புடன் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இதர தேசங்கள் அதில் அங்கத்தினராக இடமுண்டு; ஆனாலும் ஐரோப்பிய வல்லரசுகள் தம் இஷ்டம்போல் சங்கத்தை ஆட்டி வைத்தன. அதிலும் முக்கியமாகப் பிரான்சும் இங்கிலாந்தும் சர்வாதிகாரம் பெற்றன.

நியாயமான சமாதானம் ஏற்பட இடம் கொடுக்காமல், ஜர்மனியைப் பல வழியாலும் ஒடுக்கிவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு வர்சேல்ஸ் உடன்படிக்கை ஏற்பட்டது. சைன்ய பலமெல்லாம் குறைக்கப்பட்டது. தாங்கமுடியாத கடன் சுமைகள் ஜர்மனிமீது சுமத்தப்பட்டன. கடன் தொகையின் வட்டிகூடக் கொடுக்க முடியாதபடி அதன் வர்த்தகமும் நசுக்கப்பட்டது. பொருள் நிலையாலும் சைன்ய பலமின்மையாலும் ஜர்மனி உருத்தெரியாமல் போய்விட வேண்டுமென்பது பிரான்சின் விருப்பம்; அதற்கேற்றபடி செயற்கை முறையால் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவையும் நடத்தியது. ஜர்மனிக்குத் துணையாக நின்ற பெரிய வல்லரசாகிய ஆஸ்டிரியா ஹங்கேரி உடைத் தெறியப்பட்டதால் மத்திய ஐரோப்பாவில் பலமான ராஜ்யமே யில்லாமற் செய்யப்பட்டது. கிழக்கு ஐரோப்பாவில் பல சிறு தேசங்கள் முரண்பட்ட ஜாதியினர் அடங்கியதாகத் தோற்றுவிக்கப்பட்டன. ஐரோப்பாவிலேயே பிரான்சு பெரிய பலம் பெறவும் மற்றவை மிகப் பலவீன மடையவும் முயற்சி செய்யப்பட்டது. இம்முயற்சி பயனும் அளித்தது. யுத்த மத்தியில் திடீரென்று பிரான்சின் கட்சியில் சேர்ந்ததுபோல் தோன்றிய இடாலியை நேச தேசங்கள் ஆசைகாட்டி மோசம் செய்தன. அதன் விவரம் பின்னால் சிறிது விளக்கப்படும். இதுவே மகாயுத்தத்தின் பிறகு அடுத்தபடியாக நின்ற ஐரோப்பாவின் நிலை.

நேச தேசங்கள் இவ்விதம் அளவற்ற மகிழ்ச்சியுடன் வெற்றி முரசு கொட்டியபோதே, எவரும் அறியமுடியாதபடி—ஆனால் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்

போதே—ஒரு புதிய அரக்கன் வளர்ந்து வந்தான். அவன் அரக்கனல்ல; அரக்கர் மத்தியில் தோன்றிய நவசக்தி தேவி யென்று இப்போது பலர் கருதுகிறார்கள். அச்சக்திதான் சோவியத் ருஷ்யா என்ற பெயர் கொண்டு விளங்குகிறது.

## ஜர்மனியின் நிலை

1914—18 வரையில்நடந்த யுத்தத்திற்குப்பின் ஜர்மனி அடைந்த நிலையைப் பற்றி இன்னும் சிறிது விவரம் கூறி விட்டு மேலே செல்ல வேண்டும். யுத்தத்தால் ஜர்மனி இழந்த நாடுகள் பின்வருமாறு:—

ஐரோப்பாவில்—பிரான்சு அடைந்த ஆல்ஸேஸ் லொரைன், பெல்ஜியம் அடைந்த யூபன், மால்மெடி என்ற இரு நாடுகள், டென்மார்க் அடைந்த ஸ்லெஸ்விக், போலந்தைச் சேர்ந்த பேஸனும் ஸைலீஷியாவும், சுதந்திரம் அடைந்த டான்ஸிக், லிதுவேனியாவுடன் சேர்க்கப்பட்ட மெமல். இவ்வளவும் ஐரோப்பாவிற்குள் ஜர்மனி இழந்த நாடுகள். மொத்தத்தில் ஏழில் ஒரு பங்கு பூமியும் 65 லட்சம் ஜனத் தொகையும் ஜர்மனியினின்று பிரிக்கப்பட்டன.

ஐரோப்பாவிற்கு வெளியில் மான்டேடரிகளாக உள்ள காலனிகள்:—

தென் ஆப்ரிக்காவிடம் விடப்பட்ட தென்மேற்கு ஆப்பிரிக்கா, பிரிட்டிஷ் மான்டேடரி நாடாகிய கிழக்காப்ரிக்கா, பெல்ஜியத்தினிடம் விடப்பட்ட ருவாண்டாவும் உருண்டியும், பிரிட்டிஷாரும் பிரஞ்சுக்காரரும் அடைந்த காமரூன் டோகோலாந்து என்ற இரண்டு, ஆஸ்திரேலியாவிடம் விடப்பட்டவைகளும் காரோலைன் மார்ஷல் தீவுகளும்.

ஐரோப்பாவிற்குள் ஆஸ்திரியாவில் அறுபது லக்ஷம் ஜர்மானியரும் ஸெக்கோ சிலாவோகியா முதலிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அறுபத்தாறுலக்ஷம் ஜர்மானியரும் வசிக்கிறார்கள். ஆகவே ஐரோப்பாவிற்குள் இழந்த நாடுகளுடன் இந்த 126 லட்சம் ஜர்மானியர் வசிக்குமிடங்களும்,

மற்றும் ஜனத்தொகை பெருக ஐரோப்பாவிற்குள்ளேயே வேறு நாடுகளும் ஜர்மனி அடையவேண்டும். இது அத் தேசத்தின் லட்சியம்.

மத்திய ஐரோப்பாவில் உன்னத பலத்துடன் கூடிய ஒரு ஜாதியாரடங்கிய நாட்டையாளுகிறவர்கள் இதை மதமாக ஏற்கிறார்கள். இந்த லட்சியத்திற்காகப் பரிபூர்ண தியாகமும் செய்யத்தயாராயிருக்கிறார்கள். காலம் பக்குவமானால் விட மாட்டார்கள்.

ஆதலால் ஜர்மனியின் எல்லைப்புற நாடுகள் பயப்படுவதில் ஆச்சர்யமில்லை. சமயம் ஒத்துவரும்போது ஜர்மனி தம்மைத் தாக்குமென்றே அவைகள் நடுங்குகின்றன. ஜர்மனியின் ஆசைகளை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்:—

1. வர்சேல்ஸ் உடன்படிக்கையால் ஜர்மனிக்கு உண்டாயிருக்கும் குறைகளை நீக்கல்.

2. தன்னிடம் பறிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் அடைதல்.

3. ஜர்மன் ஜாதியார்களையெல்லாம் ஜர்மனி ஆட்சிக்குள் சேர்த்தல்.

4. கிழக்கு ஐரோப்பாவில் புதிதாக நாடு சேர்த்தல். உணவுப் பொருள்களும் போதிய இடங்களும் தேவை.

படை பலம் விர்த்தி செய்துகொண்டபடியாலும் ரைன்லாந்தில் ராணுவப் பிரவேசம் செய்ததின் மூலமாகவும், முதல் அவா பூர்த்தியானதாக ஹர் ஹிட்லர் தெரிவித்திருக்கிறார். யுத்தமின்றியே இவ்வெண்ணம் பூர்த்தி செய்யப்பட்டது. மற்றவை இவ்விதம் கைகூடா.

இவ்வளவும் பிரான்சு செய்த அடாத காரியங்களால் ஏற்பட்ட நிலே. சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட பிறகு சில நாடுகளில் சுய நிர்ணயக் கொள்கைகள் அனுபவத்திற்கு வந்தன. அப்பர் ஸைலீஷியாவின் ஜனசமூகத்தில் பெரும்

பகுதியினர் ஜர்மன் ஆதிக்கம் வேண்டுமென்று வாக்கு கிடைத்தபிறகு பாரிஸ் அதிகாரிகள் அம்மாகாணத்தின் திறமான பாகத்தைப் போலந்துக்குக் கொடுத்தார்கள். கைத் தொழிற்சாலைகள் நிரம்பிய பிரதேசங்களில் முக்கால் பாகத் திற்கு மேலும் உலோகப் பொருள்கள் கிடைக்குமிடங் களில் ஏராளமான பாகமும் போலந்துக்குக் கொடுக்கப்பட் டன. வாக்கெடுப்பதற்கு முன் ஒரு முறையும் பின் மற் ருெரு முறையும் போலந்துக்குச் சாதகமான கலகங்களுக்கு பிரான்சு துணை செய்தது. முன்பு ஜனங்களை பயமுறுத்தச் செய்தது; அது பலிக்காமற் போகவே, பிறகு வல்லரசு களுக்குச் சமாதானம் கூற மற்ருெரு கலகத்தைத் தோற்று வித்தனர். இவ்விதம் ஸைலீஷியா ஜர்மனிக்கு உபயோக மில்லாமற் போயிற்று. ஜர்மனிக்கு எப்போதும் ஆபத் தையே உண்டாக்கவேண்டு மென்ற எண்ணம் கொண்ட பிரான்சின் இஷ்டப்படி உடன்படிக்கை வர்சேல்சில் பூர்த்தி யாயிற்று.

பிரான்சின் புலியெனப் பெயர் வாங்கிய மான்சீர் கிள மன்சியோ இந்த உடன்படிக்கை மூலமாக அடைந்த பய னைப் பற்றி "இச் சமாதானம் என்பது யுத்தத்தைப் புது வழியாக நடத்துவதாகும்" என்ருர்.

சர்வதேச சங்க மூலமாக ஏற்பட்ட கவனேண்டைப் பலப்படுத்தி சர்வதேச நட்பை வளர்ப்பதற்குப் பதிலாக அநீதியாக ஏற்பட்ட வர்சேல்ஸ் உடன்படிக்கையின் ஷரத்து களைக் கடுமைப் படுத்தி வந்தார்கள். அந்த உடன்படிக்கை யில் கையெழுத்திட்ட ஜர்மன் பிரதிநிதிகள் அப்போதே எச்சரிக்கை செய்தனர். "சமமான பலத்தோடு இல்லாத ஜர்மனி நிர்ப்பந்தம் தாங்கமுடியாமல் கையெழுத்திடுகிறது. ஆதலால் இது நியாயமாக ஜர்மனியைக் கட்டுப்படுத்தாது. பின்னல் அதை அலட்சியம் செய்யக்கூடிய காலம் வந்தாலும் வரக்கூடும்" என்ருர்கள். அவ்வித காலம் இப்போது வந்து விட்டது.

## பிரான்சின் திமிர்

யுத்தம் முடிந்த பிறகு ஐரோப்பாவிலேயே பிரான்சு தான் மித மிஞ்சிய பலம் அடைந்திருந்தது. 1918 முதல் 1933—34 வரையில் பிரஞ்சு சைன்யமே ஐரோப்பாவில் மிகப் பெரிய படை. தொகையிலும், திறமையிலும், சாத னங்களிலும் பிரான்சுக்குச் சமமாக எதுவுமில்லை. ஜர்மனி யிடம் விரோத மனப்பான்மையை மாற்றவில்லை. இதைத் தவிர மற்றப்படி பிரான்ஸ் தன் பலத்தைத் துர்வினியோகம் செய்யவில்லை என்று சொல்வது பொருந்தும். பிரயண்டு இருந்தவரையில் சர்வதேச சம்பந்தமாக அமைதியை நிலைக் கச் செய்யவே வேலை செய்து வந்தான். "நான் அந்நிய நாட்டிலாகா மந்திரியாயிருக்கும் வரையில் யுத்தமே ஏற் படாது" என்று 1929ல் பிரயண்டு கூறினான். 1932ல் அவன் இறந்த பிறகு அநர்த்தங்கள் பெருகலாயின.

"பிரான்சுக்கு உண்மையில் பயமில்லை, உலகிலேயே அதிக பலம் பொருந்திய சைன்யங்கள் இப்போது பிரான் சுக்குச் சொந்தம். அதற்குப் பயத்தை விளைக்கக்கூடிய ராணுவத்திறம் வாய்ந்த அரசாங்கங்கள் எல்லாம் தகர்க்கப் பட்டன. கொள்கையால் தம்முள் எவ்வளவோ பேதங்க ளுள்ள இங்கிலந்தும் இடாலியும் பிரான்சிற்குச் சிநேகமான தேசங்களே. கிழக்கில் ஸெக்க சிலாவோகியா, போலந்து என்ற ரிப்பப்ளிக்குகளும் ஜுகோசிலாவியா, ரொமேனியா என்ற அரசாங்கங்களும் பிரான்சைப்போல் எல்லைப்புற பய முள்ளவை. ஆதலால் அவைகளும் பிரான்சுடன் உறவு கொண்டவை" என்று 1924ல் இருந்த நிலையைப்பற்றி ஜனீ வாவில் சர்வ தேச தொழிலாளர் காரியாலய டைரக்டரா யிருந்த ஸ்ரீ ஆல்பர்ட் தாமஸ் தெரிவித்தார்.

1931ம் வருஷம் ஐரோப்பா தேசங்களிலிருந்த சைன்ய பலம் கவனிக்கத்தக்கது. ஜர்மனிக்கு ஒரு லட்சம் துருப்பு களே இருந்தன; விமானப்படை கிடையாது. கடற்படை பிரான்சு அல்லது இடாலிக்குச் சமமாகவுமில்லை. அப்படி

யிருக்க, பிரான்சிடம் 5 லட்சம் துருப்புகளுக்கு மேலும் ருஷியாவிடம் 562,000 துருப்புகளும் இருந்தன. மற்ற நேசதேசங்கள் ஒவ்வொன்றிலும ஏராளமான படைகள். இவ்வளவிருந்தும், வர்சேல்ஸ் உடன்படிக்கைக்கு விரோத மாகவே பிரான்சு தேசம் தன்னைப்பலப்படுத்திக்கொண்டும், ஜர்மனிக்கு அவசியமான படை வைத்துக்கொள்ளவும் அனு மதி கொடுக்க மறுத்தது. வர்சேல்ஸ் உடன்படிக்கையை ஒட்டியே கெள்ளாக் பாக்டும் லகார்னோ உடன்படிக்கையும் ஏற்பட்டன. ருஷியாவுடன் பிரான்சு ராணுவ ஒப்பந்தமும் 1935ல் செய்துகொண்டது. அதாவது ருஷியாவை ஜர்மனி எதிர்த்தால் பிரான்சு மேற்கிலிருந்து ஜர்மனியைத் தாக்க வேண்டும். பிரான்சு தன் கிழக்கெல்லையை மிகப்பலமாக அரண் செய்து வைத்திருக்கிறது. அதே எல்லையில் ரைன் லாந்து பக்கம் ஜர்மனி சைன்யபலமோ அரண்களோ செய்து கொள்ளக்கூடாது. இதுவே வர்சேல்ஸ் உடன்படிக்கை.

அவ்வாறு ஒடுக்கப்பட்ட நிலையிலிருந்து தன்னைப்படிப் படியாக மற்ற தேசங்களுக்குச் சமமாகச்செய்து கொள்ள வேண்டி ஜர்மனி சர்வ தேச சங்கத்தில் சேர்ந்தது. ஆயுதப் பரிஹரணப் பேச்சு மும்முரமாக இருந்தபோது ஜர்மனியும் நியாய வழிக்கெல்லாம் கட்டுப்பட விரும்பியது. 1924 ஏப்ரல் 16ந் தேதி பிரான்ஸுடன் சமமாக 3 லட்சம் துருப்புகள் ஜர் மனி வைத்துக் கொள்வதென்றும் விமானப்படையில் பிரான் சின் பலத்தில் சரிபாதி தான் சேகரம் செய்ய இடம் வேண்டு மென்றும் ஜர்மனி கேட்டபோது பிரான்சு மறுத்துவிட்டது. அப்போதுமுதல் பிரான்சுக்கு ஏழரை நாட்டான் ஆரம்பம். அதுமுதல் ஒரு வருஷ காலத்தில் பிரான்சு ராணுவ பலத் தில் முதல் ஸ்தானத்தை இழந்தது. ஜர்மெனியில் 1935-ல் கட்டாய ராணுவச் சட்டம் ஏற்பட்டு அத்தேசம் சங்கத்தி னின்றும் விலகிக் கொண்டது. 1931-ல் பலமான சைன் யமும் விமான படைகளும் (1500) வைத்திருந்த ருஷ்யா அதுமுதல் பத்து, இருபது, முப்பது மடங்காகத் தன் படைபலத்தை வளர்த்து வருவதைக் காண்கிறோம்.

ஜர்மனியின் லட்சியமெல்லாம் மேற்கிலில்லை, கிழக்கே தான். அப்படியிருக்க அது கிழக்கே யுள்ள தேசங்கள் படை பலம் வளர்க்கப் பார்த்துக் கொண்டிருக்குமா? 1933ம் வருஷம் ஜனவரி 30ந் தேதி ஹிட்லர் பிரதம தலைவரானர். அது முதல் ஜர்மனி மிதமிஞ்சி வலுவடைந்து வருகிறது. இப்போது படைபலத்தால் உலகில் ருஷ்யாவே முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. விமான படைகளில் மற்ற தேசங்களில் உள்ளவற்றை யெல்லாம் ஒன்று சேர்த்தாலும் ருஷிய படைக்குச் சமமாகாது. இவ்வளவும் கிழக்கே ஜப்பானைத் தடுக்க அதற்கு அவசியமாகிறது. இந்த நிலையில் ஜர்மனி மௌனம் சாதிக்குமா?

ஸைன்ய பலமுமின்றித் தன்னைச் சுற்றிப் பெரிய சைன்ய பலம் கொண்ட நாடுகள் ஒன்று சேர்ந்து தன்னை நசுக்கவும் விரும்புகையில் தற்காப்பிற்கு வேண்டிய காரியத்தை ஜர்மானியர் எடுத்துக் கொள்ளாமலிருப்பார்களா? முன்னம் ஜர்மனியின் ஆசைகளைக் கூறினேம். இப்போது அது ஏற்றுக் கொள்ள விரும்பும் வழிகளைக் கவனிப்போம்.

## ஜர்மனியின் லட்சியம்

உலகப் புகழ்பெற்ற பெரிய வல்லரசாக, ஜனத்தொகைக் கேற்ற ராஜ்ய விஸ்தீரணமுள்ளதாக ஜர்மனியைச் செய்து கொள்ளவேண்டும். 1914-ல் இருந்த எல்லையுடன் ஜர்மனி திருப்தியடையாமல் ஐரோப்பாவிற்குள்ளேயே புதிய தேசங்களைக் கைப்பற்ற வேண்டும். புதிய தேசங்கள் என்ற போதே ருஷ்யாவும் அதன் எல்லைப்புற தேசங்களும் நினைவிற்கு வருகின்றன. ஜர்மன் ஜாதியார்கள் வசிக்கின்ற பூமிகளைச் சேர்ப்பது மாத்திரம் போதாது. நொறுங்கிக்கொண்டு வரும் ருஷ்யாவினின்றும் பலவீனமாயிருக்கும் எல்லைப்புற நாடுகளிலிருந்தும் புதுராஜ்யம் சேர்க்கவேண்டும். இது 1923-ல் ஹிட்லர் வெளியிட்டுள்ள 'மாயின் கெம்ப்' என்ற நூலில் காணப்படும் லட்சியம். இப்போதுள்ள தேசிய சம

தர்ம ஜர்மன் தொழிலாளர் கட்சியின் கருத்தைக் கவனிப்போம்:—

"பல தேசத்தவர்க்கும் சுயநிர்ணய உரிமையுண்டு; அதை எவரும் அனுபவிக்கலாம். ஆதலால் அகில ஜர்மானிய ஐக்கியம் வேண்டுகிறோம். எங்கள் ஜனங்களைப் போஷிக்க உணவுப் பொருள்கள் வேண்டும். அதற்காகப் புதிய பிரதேசங்கள் தேவை. அதிகமாக வளரப்போகும் ஜனத்தொகைக்கும் இடம் வேண்டும்."

மாயின்கெம்பின் கருத்தும் இதுவும் ஜர்மனியில் ஆட்சி நடத்தும் கட்சியின் கொள்கைகள். 1936-ம் வருஷம் அதே ஹிட்லர் கூறுவதைக் கேளுங்கள்.

> "நாங்கள் அமைதியையே விரும்புகிறோம்; அதையே தேடுகிறோம். ஜர்மனியின் கௌரவத்திற்கு ஹானி ஏற்படாவிட்டால் அது சமாதானத்தையே நாடும். **ஐரோப்பாவில் எங்களுக்கு ராஜ்யாபேட்சை யில்லை.** ஏனெனில் ஜனத்தொகைக் கேற்ற அளவு ராஜ்ய விஸ்தீரணமும் உணவுப் பொருளும் பொருந்தவில்லை யானல் யுத்தத்தால் அதை ஒழுங்குபடுத்த முடியாது. அமைதியும் சமரசமும் வேலைசெய்து உணவு சம்பாதித்தலும் ஆகிய இவைகளே ஜர்மனிக்குத் தேவை."

இரண்டுவித கொள்கைகளில் எதை நம்புவது? நேர்த்தியான சொல் அலங்காரத்தால் யாது பயன்? அமைதி வேண்டும் பிரசங்கங்களால் எல்லைப்புற நாடுகளிலுள்ள ஜனங்களுக்குப் பயம் நீங்கவில்லை. மாயின் கெம்பிலுள்ள கட்டளைகளை ஒவ்வொரு ஜர்மன் கல்விச் சாலையிலும் மாணுக்கருக்குப் போதிக்கிறார்கள். 'மாயின் கேம்ப்' நூலில் கண்டபடி ஆசைகள் வளர்க்கப்படுகின்றன. ஆயினும் ஐரோப்பாவில் தற்காலம் உள்ள நிலையோ அவ்வாசைகளைப் பூர்த்திசெய்து கொள்ள இடம் தரவில்லை. இதை யறிந்ததன் பயனாக ஹிட்லர் 1936-ல் பேசிய சொற்கள் அமைந்திருக்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீமான் ஈவர் 'ஜான்புல்' பத்திரிகையில் ஒருசமயம்

எழுதியது குறிப்பிடத்தக்கது. இப்போது ஜர்மனி யுத்தம் தொடங்கவும் பயப்படும் என்று அவர் எடுத்துக்காட்டுகிறார். அவர் கூறுவதன் சாரம்:—

## வலுவில் தாக்காது

“சொவியத் யூனியன்மீது போர்செய்வதற்கு ஜர்மனி தயாராயிருக்குமா? ஆஸ்திரியாவைச் சேர்த்துக் கொள்வதில் திருஷ்டி செலுத்துமா? ஸெக்கோ சிலாவோகியாவைப் பங்கு போட விரும்புமா? அல்லது யுத்தபயம் காட்டி பிரிட்டன் தன்னிடம் அடைந்த காலனிகளைத் தருமாறு கேட்குமா?

“ரைன்லாந்தில் கோட்டைகளைக் கட்டிக்கொண்டபின், பிரஞ்சுப்படை தன் எல்லைக்குள் புகாமல் தடைசெய்தபிறகு ஜர்மனி கிழக்கே பாய்ந்து போல்ஷிவிஸத்தை (ருஷ்யாவை) அழிக்குமென்றும் குடியேறப் புது நாடுகளை யடையுமென் றும் சொல்லப்படுகிறது. ஹிட்லருக்கு யூதர்களிடமுள்ள விரோதத்தைப்போல் போல்ஷிவிக் மதத்தினிடமும் சொவி யத் யூனியனிடமும் துவேஷமுண்டு என்பது உண்மையே. மார்க்ஸ் மதமானது மாஸ்கோவில் தோன்றிய யூதர் சூழ்ச்சி யென்றும் அது ஆரிய நாகரிகத்தை யழிக்கத் தோன்றிய தென்றும் ஹிட்லர் நினைக்கிறார். ஆனால் ருஷ்யா மீது பாய் வது இலகுவான காரியமா?

“1914-ம் வருஷத்தில் ஜர்மனியும் ருஷ்யாவும் அடுத்த தேசங்களாக இருந்தன. இப்போதும் அப்படியிருந்தால் யுத் தம் ஏற்படக்கூடும். இப்போது இருதேசங்களுக்கு மிடையில் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு வேறு நாடுகள் ஏற்பட்டு விட்டன. ஆதலால் நினைத்தவுடன் மோதிக்கொள்ள முடி யாது. வடக்கே பால்டிக் நாடுகளின் மூலமாகவோ தெற்கே ருமேனியா மூலமாகவோ ருஷ்யா மீது படையெடுத்துச் சென்றால் ஜர்மனிக்குப் பலமான ராணுவத் தடைகள் ஏற் படும். போலந்து ஒரு கட்சியிலும்சேராது. செம்படைகளோ அல்லது ஜர்மன் படைகளோ தன் பிரதேசங்களை உபயோகி க்க இடம் கொடுக்கவும் மாட்டாது. ஆதலால் ருஷ்யாமீது

படையெழுச்சி கஷ்டம். அதுபோலவே பிரான்சு மீதிலும் பாய்வது முடியாது.

"ஆஸ்திரியா, ஸெக்கோ சிலாவோகியா ஆகிய இரண்டும் அபாய ஸ்தலங்களே. ஜர்மனியின் சைன்யங்களைச் சில வாரங்கள் கூடத் தடைசெய்ய முடியாத சிறு நாடுகளுக்கு ஆபத்து ஏற்படக்கூடும். ஆஸ்திரியாவின் ஜனத்தொகையில் சரிபாதி—யுவர்களில் பாதி—ஜர்மனியுடன் சேரவேண்டுமென்று எண்ணினுல் அத்தேசம் ஜர்மனியுடன் யுத்தம் செய்யமுடியுமா?

"ஏறக்குறைய சரிபாதி ஜனத்தொகை ஜர்மானியர்களாயுள்ள ஆஸ்திரியாவில் ஜர்மனியை மீறி எதுவும் நடைபெற முடியாது. அடுத்தபடி ஸெக்கோ சிலாவோகியாவைக் கவனித்தால் அங்கும் இம்மாதிரி தொல்லையே. ஸெக்ஜாதியார் மெஜாரிடியினர். அடுத்தபடி பெரிய மைனுரிடியார் ஜர்மன் ஜாதியார். ஜர்மன் ஜாதியார் தமக்குச் சரியான நீதி கிடைப்பதில்லை யென்று புகார் செய்வது ஒருபக்கம்; ஜர்மானியர்கள் அடங்காதவர்களாயிருக்கிருர்கள் என்றும் அவர்களுக்கு எல்லா உரிமைகளும் கொடுத்துவிட்டால், அவர்கள் தேசத்திற்கே அபாயம் விளைவிப்பார்கள் என்றும் ஜெக் ஜாதியார் குறை கூறுவது மற்ருெரு பக்கம் சகஜமாகிவிட்டது. இதனுல் சமயம் நேரும்போது—காலம் பக்குவமாகும்போது—ஜர்மானியர் கலகம் விளைத்துப் பிரஜா யுத்தம் பலமடைந்தால் அப்போது ஜர்மனி குறுக்கிடலாம். அடக்கப்பட்ட ஜர்மானியர் சார்பில் குறுக்கிட்டு ஜெக் அரசாங்கத்தார் கொடுக்க முடியாத அளவு நஷ்ட ஈடு கேட்கக்கூடும். இம்மாதிரி நிலைமைகளிலிருந்துதான் யுத்தங்கள் உற்பத்தியாகின்றன. விதுவேனியாவிலுள்ள மெமல் நகரமும் ஜர்மானியரது தொல்லைக்குக் காரணமாகலாம்.

"ஜர்மன் ஜாதியார் அந்நியராட்சிக்குள் தங்கியுள்ள இந்நாடுகளில் தொல்லையை உண்டாக்கவல்ல சந்தர்ப்பங்களுக்குக் குறைவில்லை. எங்கேயாவது சமயம் ஒத்துக்கொண்டு பய

னும் கிடைக்கும்போலிருந்தால் ஜர்மனி அங்கு ஒரு சண்டையை எழுப்பி விடுவது இலகு.

## காலனிகள்

"கடல்தாண்டி விரிவாகச் செல்வது ஜர்மனி சம்பந்தமாகப் பெரிய தவறு என்பதே மாயின்கேம்ப் நூற்கருத்து. யுத்தத்திற்குப்பிறகு, காலனிகளைத் திரும்பவும் அடைய வேண்டுமென்று ஏற்பட்ட கிளர்ச்சி யூதர்களின் சூழ்ச்சி. இது தெரியாத பல ஜர்மானியர் யூதர்கள்வலையில் அகப்பட்டுக் காலனிகளை விடக்கூடாதென்று சண்டையிட்டனர். காலனிகளுக்காகச் சண்டை உபயோகமில்லை. ஆதலால் அமைதியாகவே காலனிகளைப் பங்கிட்டுக்கொள்ள பேரம் பேச சந்தர்ப்பம் ஏற்பட்டால் ஜர்மானியர் விடமாட்டார்கள்.

"பிரிட்டிஷ் ராஜ்யம் பசிபிக் மகா சமுத்திரத்தில் ஜப்பானுடனோ அல்லது மத்திய தரைக் கடலில் இடாலியுடனோ யுத்தம் செய்ய நேர்ந்தால் அச்சந்தர்ப்பம் ஜர்மனிக்கு உபயோகப்படலாம். தம் காலனிகளைத்திரும்ப அடைவதையே நிபந்தனையாக்கிக் கொண்டு ஏதேனும் ஒரு கட்சியில் சேரக் கூடும்.

"எழுகோடி ஜனத்தொகையுள்ள ஜர்மனி, தேசீய பலமும் வீரமும் நிறைந்து முதல்தரமான சக்தியும் பெருமையும் பெற்று விளங்குகிறது. விரைவாக யுத்த தளவாடங்களைப் பெருக்கிக்கொண்டு வருகிறது. தற்காலம் தனக்குள்ள புண்பட்ட நிலையை அறிந்து இனி பெருமை பெறுங் காலம் வருமென்று பூர்ண நம்பிக்கையும் கொள்கிறது. புண்ணை ஆற்றுவதும் பெருமையை அடைவதும் பலவந்தத்தால் மாத்திரமே ஆகும் என்று நம்புகிற கட்சியும் கட்சித்தலைவரும் அத்தேசத்தை இப்போது நடத்துகிறார்கள். சமீபத்தில் ஜர்மன் பயம் ஏற்படாமலிருக்கலாம். ஆயினும் மாயின்கேம்ப் உபதேசங்களாலும் தற்கால நிலையாலும் பயம் நீங்கவில்லையென்று கூறமுடியும். அதிருப்தி நிறைந்து பேராசையுடன் கூடிய ஒரு தேசம், கனமாக ஆயுதங்களைப்பூண்டு நிற்கும்

ஒரு பெரிய நாடு ஐரோப்பாவின் நடுவில், பொங்கிவரும் ஆசைகளை அடக்கிய வண்ணம், ஆனால் பலம் நிறைந்து சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது அந்தப் பலத்தை யுபயோகிக்கத் தயாராகவும் நிற்கிறது.”

‘மாயின் கெம்ப்’ என்றால் ‘எனது யுத்தமுறை’ என்று பொருள். இது முதன்முதல் 1923ல் தயாரானது. ஆயினும் 1925ல் தான் முதன்முதல் செல்வாக்குப் பெற்றது. அப்போது முதல் பாகம் 10,000 பிரதிகள் அச்சிடப்பட்டன. 1926ல் இரண்டாம் பாகம் வெளியாகியது. 1929ம் வருஷ முடிவு வரை 23,000 புத்தகங்கள் செலவாயின. 1930ம் வருஷம் மே மாதம் இரண்டு பாகங்களும் சேர்ந்து ஒரே புத்தகமாக வெளிப்பட்டது. 1933ல் ஜனவரி மாதம் நாஜிகட்சி ரதவி பெற்ற வரையில் அந்தப் புத்தகம் 1,92,000 பிரதிகள் விற்றன. பிறகு ஒன்பது மாதங்களில் விற்கப்பட்ட எண்ணிக்கை பத்து லட்சமாகியது. இப்போது 1937ல் அப்புத்தகத்தின் 230-வது பதிப்பு வெளியாகியிருக்கிறது. இதுவரையில் 25 லட்சம் புத்தகங்சள் விற்கப்பட்டிருக்கின்றன. இப்போது ஜர்மனி அரசாங்கத்தார் ஒரு புது உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஜர்மன் பிரஜைகள் கல்யாணம் செய்து கொள்ளும்போது அரசாங்கத்தார் செலவில் தம்பதிகளுக்கு இப்புத்தகம் ஒன்று வாங்கிக் கொடுக்கப்படும்.

## ராஜ தந்திரம்

மேலே சொல்லியவாறு ஸ்ரீமான் ஈவர் எழுதிய பிறகு ஆஸ்திரியா சம்பந்தமாக ஜர்மனியும் இடாலியும் ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றன. இதன் மூலமாக ஜர்மானியர்களின் லட்சியம் கைகூடும் வழியில் ஆஸ்திரியாவின் சுதந்திரம் காப்பாற்றப்படுகிறது. இடாலியின் தேவை இவ்வளவே. ஆஸ்திரியாவுக்கும் ஜர்மன் ஆதிக்க பயம் தற்காலிகமாக நீங்கியது. ஆயினும் ஆஸ்திரியா ‘ஜர்மானிய ராஜ்யம்’ என்ற கொள்கையை இடாலிய ஜர்மானிய ஒப்பந்தம்வ ற்றுக்கொள்கிறது. ஆஸ்

திரியாவை முடி மன்னரது ராஜ்யமாக மீண்டும் செய்தா லொழிய உண்மையான பலம் ஏற்படாதென்று ஆஸ்திரியர் நினைக்கிறார்கள். ஜர்மனி அதற்கு இடம் கொடுக்காது. இடாலியின் நட்பை ஜர்மனி விரும்பும் வரையில் ஆஸ்திரியா மீது அது பாயாதென்று நம்பலாம்.

இடாலிக்குப் புதிதாகக் கிடைத்த பலமும் ஜர்மனியுடன் இடாலி நட்புக் கொள்ள வேண்டிய அவசியமும் இதற்குக் காரணங்கள். அபிசீனிய யுத்தத்திற்குப்பிறகு இடாலி பிரான்சையும் பிரிட்டனையும் நம்ப முடியாதென்று தீர்மானித்துப் புதிதாக ஜர்மனியுடன் உறவு கொண்டாடுகிறது. ஜர்மனியும் ஐரோப்பாவில் மற்ற நாடுகளைவிட இடாலியை நம்பலாம். ஆதலால் சிறிது விட்டுக்கொடுத்தாவது அதன் சிநேகத்தை யடைந்தது. ஆஸ்திரியாவிடம் ஜர்மனி ராஜ்யாபேட்சையைத் தியாகம் செய்தது இதற்காகத்தான். இனி ஜர்மனி ஆஸ்திரியா, இடாலி என்ற மூன்று தேசங்களும் ஒன்றாக நிற்கும்.

நாஜிக் கட்சியைச் சேர்ந்த பிரபல ஆஸ்திரிய தலைவர் சிறிது காலத்திற்கு முன் ஓர் அவா கொண்டார். அதுவே இப்போது நிறைவேறியிருக்கிறது போலும். அவர் விரும்பியதன் சாரம் :—

"கொடுமை இழைக்காமலே தேசீய சமதர்ம ஆஸ்திரியாவை (National Socialist Austria) உண்டாக்க முடியும் அது முக்கியமான ஆஸ்திரிய தேச தர்மத்தைக் காப்பாற்றியபடியே சுதந்திர நாடாகவும் இருக்கலாம். அவ்விதம் ஏற்படும் நாஜி ஆஸ்திரியாவானது ஜர்மனியுடன் கலை வளர்ச்சியிலும் அரசியல் துறையிலும் பொருள் நிலையபிவிர்த்தியிலும் ராணுவ சம்பந்தமாகவும் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொள்ள இடமுண்டு" என்றார். சரித்திர இயல்புக்கேற்றபடி தேச முன்னேற்றத்திற்கு அவர் விரும்பியவாறு இடாலியும் ஜர்மனியும் இப்போது ஆஸ்திரியாவைப்பற்றி முடிவு செய்திருக்குமென்று நம்புகிறோம்.

இந்த நிலை, அதாவது, ஜர்மனி, ஆஸ்திரியா, இடாலி ஆகிய மூன்றும் இவ்வளவு விரைவில் ஒன்றுபட்ட நிலை அபிசீனிய யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்டது. அபிசீனியா வுக்குத் துரோகம் செய்து, ஜர்மனிக்குப் பயந்த பிரான்சு, இடாலி செய்த அநாகரீக மிருகச் செயல்களுக்கெல்லாம் உடந்தையாயிருந்தது. இப்படிச் செய்தால் இடாலியின் புதிய பலம் தனக்கு உபயோகப்படுமென்று பிரான்சு நினைத் தது; ஆனால் சரித்திர இயல்பாகிய 'கடவுள் சங்கல்பம்' வேறாகுமென்று அது அறியவில்லை. பிரான்சுக்கு இடாலி யின் பலம் வேண்டும். ஆனால் இடாலிக்கோ தன் வடக்கெல் லையைக் காக்க ஜர்மனியின் நட்பு அவசியமாகி விட்டது. வேறு பகை இடாலிக்கு இல்லை, அபிசீனியா முதலிய கிழக்கு ஆபிரிக்கா தேசங்களில் பிரிட்டன் தொல்லை கொடுக்காமல் இருப்பதற்கும் ஜர்மனியைப்போன்ற வல்லரசின் தயவு இடாலிக்குத் தேவை. ஜர்மனிக்கும் இடாலி உபயோகமா கும்; பிரான்சும் ருஷ்யாவும் சேர்ந்து செய்யும் சூழ்ச்சிகளில் அகப்படாமல் ஜர்மனி தப்புவதற்கு இடாலி பலம் பெற்று சிநேக தேசமாக வேண்டும். ஐரோப்பாவைப் பற்றிய வரை யில் சரித்திர நிலை ஜர்மனிக்குச் சாதகமாக நிற்கிறது, யுத் தம் ஏற்பட்டாலும் இந்நிலையைக் காப்பாற்றிக் கொள்ளத் தக்க அரசியலறிவு ஜர்மனிக்குண்டு.

## இடாலியின் நிலை

அடுத்தபடி முக்கிய விஷயமாக உள்ள இடாலியின் வளர்ச்சியைக் கவனிப்போம். மகாயுத்தம் நடந்ததற்கு முன் இடாலி ஆஸ்திரியா ஜர்மனி மூன்றும் சேர்ந்து ஐக்கியமாகி ஐரோப்பாவைக் குறுக்கே பிளந்து நின்றன. யுத்த காலத் தில் சில காரணங்களால் ஒதுங்கி நின்ற இடாலியைப் பிரிட்டனும் பிரான்சுடன் சேர்ந்து தங்கள் கட்சியில் சேர்த் துக் கொண்டது.

அப்போது 1915-ல் லண்டனில் ஓர் ஒப்பந்தம் நடை பெற்றது. ஐரோப்பிய யுத்தத்தின் பயனாக நேச தேசங்கள்

(பிரட்டனும் பிரான்சும்) வெற்றி பெற்றால் அதன் மூலமாக ஆப்பிரிக்காவில் அடையப்போகும் லாபத்தில் இடாலிக்கும் போதுமான பங்கு கொடுக்க வேண்டும். வடகிழக்கு ஆப்பிரிக்காவில் இடாலி, காலனி பலம் பெறுமாறு பிரான்சும் பிரிட்டனும் தங்கள் காலனிகளை விட்டுக் கொடுத்தாவது உதவி செய்யவேண்டு மென்பது பேச்சு. இதை நம்பியே யுத்தத்தில் இடாலி பூர்ண உதவியும் செய்தது. ஜெர்மனிக்கு ஜெயம் ஏற்படுமென்ற சந்தேகம் பலமாயிருந்த போதே இவ்விதம் இடாலி துணிந்தது. அதற்காகவே ஆப்பிரிக்காவிலுள்ள ஜர்மன் காலனிகள் நேச தேசங்களுக்கு வர்சேல்ஸ் உடன்படிக்கைப்படி 1919-ல் கொடுக்கப்பட்டன. 1924-ல் கெனியாவில் சொல்ப பாகம் இடாலிக்கு பிரிட்டனால் கொடுக்கப்பட்டதும் இதற்காகத்தான் மற்றப்படி இடாலி ஏமாற்றமடைந்தது. இதன் பயன் இப்போது உண்டாகிய கஷ்டங்கள். இது நிற்க, 1916-ல் இடாலியில் வசித்த ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தரான சீனர் ரோஸோ என்னும் அறிஞர் சிறந்த அரசியல் அறிவு பொருந்திய ஒரு நூல் தயார் செய்து இடாலிக்கு அவசியம் தேவையாகிய சில லட்சியங்களை விளக்கினர். அதைப் பின்பற்றியே இடாலியர் இப்போது முயற்சி செய்யப் புறப்பட்டிருக்கலா மாகையால், இங்கு அந்தத் திட்டத்தைக் குறிப்பது பொருந்தும்.

லண்டன் ஒப்பந்தத்தில் இடாலிக்குப் போதுமான பலனை ஆப்பிரிக்காவில் கொடுப்பதாகக் கண்டிருப்பதால் சீனர் ரோஸோ பின்வருமாறு இடாலியர் கேட்கவேண்டு மென்றார். இப்போதே இடாலிக்குச் சொந்தமாகிய லிபியா, எரீட்ரியா, ஸொமாலிலாந்து இம் மூன்றையும் தவிர்த்து, பிரிட்டனும் பிரான்சும் தங்களுக்குச் சொந்தமான சொமாலிலாந்தையும் கொடுத்துவிட வேண்டும். நேச தேசங்கள் ஜர்மன் காலனிகளை அடையலாம். இடாலிக்குச் செங்கடலின் மேல் கரையில் ஆப்பிரிக்காவின் கீழ்ப்பாகத்தில் தொடர்ந்த பூமி சொந்தமாகிவிடும். அராபியாவின் செழிப்பான பாகமாகிய ஏமன் வாசிகளும் எரீட்ரியா, அபிசீனியா தேசத்தவர்களும்

ஆயிர வருஷங்களுக்கு மேலாக ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களிடம் செல்வாக்கை இடாலி செலுத்த நேச தேசங்கள் விட்டுக் கொடுக்கவேண்டும். இப்படிச் செய்தால் செங்கடலின் வாய்ப்பக்கம் இருகரையும் இடாலிக்குச் சேர்ந்துவிடும். அப்போது மாத்திரமே இடாலிக்கும் ஆப்பிரிக்காவில் சமத்துவ பதவி கிடைத்ததாகுமென்றார். இந்த ஆவலை இடாலியர் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும்.

பிறகு அந்த உத்தியோகஸ்தர் நேச தேசங்களுக்காக விட்டுக்கொடுக்கும் முறையில் சில யோசனைகளைக் கூறுகிறார். அபிசீனியாவின் மேற்குப் பக்கத்தில் ஸானு ஏரியிருப்பதாலும் அது நீல நதிக்கு முக்கிய ஜீவனாகி பிரிட்டனுக்கு அவசியமாயிருப்பதாலும் அப்பக்கத்தில் இடாலி குறுக்கிடலாகாதென்றார். கிழக்கே பிரான்சு இருப்புப் பாதை போட்டு ஒரு மாகாணத்து வர்த்தகத்தால் பயன் பெறுவதால் அங்கும் செல்ல வேண்டாம். தென்கிழக்கே மிகச் செழிப்பான ஹாரார் மாகாணம் இருக்கிறது. அதன் வர்த்தக சரக்குகள் ஒட்டகைகளின் மீதே இன்னமும் செல்கின்றன. ஆதலால் பிரிட்டிஷ் சொமாலிலாந்தைத் தாம் அடைந்த பிறகு இலகுவாக ஹாரார்மீது செல்வாக்கு ஏற்படும்; அது போதும் என்றார். எரீட்ரியாவிலிருந்து அபிசீனியா வழியாகச் சொமாலிலாந்திற்கு ரயில் பாதை போடுவது பயனற்ற வேலையென்பது சீஞர் ரோஸோவின் கருத்து. இவ்விதம் செங்கடலிலும் கிழக்கு ஆபிரிக்காவிலும் பலம் ஏற்படுத்திக்கொண்டு மத்தியதரைக் கடலில் படை பலம் உண்டாக்க இடாலியர் விரும்பலாம். மேலே குறித்தபடி சீஞர் ரோஸோவின் திட்டத்திற்கு இடம் கொடுத்தால் பிரிட்டனது மத்தியதரைக் கடற்பாதையும் செங்கடலும் ஆபத்திற்குள்ளாகக் கூடும். ஆதலால் இதில் பிரிட்டனுக்கே அதிக கவலை.

**1919**-ம் வருஷம் இடாலி சில யோசனைகளைப் பிரிட்டனுக்குத் தெரிவித்தது. பிரான்சைப் பாதிக்க வல்லதாக இருந்தபடியால் பிரிட்டன் **1906**-ம் வருஷ உடன்படிக்கைக்கு விரோதமென்று அவற்றை மறுத்தது. ஆயினும் மீண்டும்

அதே யோசனைகளை 1925-ல் திரும்பவும் இடாலி தெரிவித்த போது பிரிட்டன் ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது. அவற்றை ஆதாரமாக்கிய ஒப்பந்தப்படி அபிசீனியாவின் மேற்குப்பாகத்தில் இடாலி முழு செல்வாக்கும் அடையவேண்டும். எரீட்ரியாவிலிருந்து அடிஸ் அபாபாவுக்கு மேற்குப் பக்கமாக இடாலிய சொமாலிக்குப் பெரிய இருப்புப்பாதை போடுவதை இங்கிலாந்து தடைசெய்யாமலிருக்கவேண்டும். ஸானு ஏரிக்கு அணைகட்டும் உரிமை பிரிட்டனுக்கே இருக்கவேண்டும் என்று இடாலியும் கேட்கத் தொடங்கும். இடாலியின் இருப்புப் பாதையை ரட்சிக்க மேற்கு அபிசீனியாவில் பொருளபிவிருத்தி சம்பந்தமாக இடாலி முழு ஆதிக்கம் விரும்புகிறது. இதைப் பிரிட்டன் ஆதரிக்க வேண்டும். [ஆதிக்கம் அல்ல. செல்வாக்கு என்ற பதம் உபயோகப்பட்டிருக்கிறது.] ரயில் வசதிக்காகவும் ஸானு ஏரி அணைக்காகவும் சூடானிலிருந்து மோடார் ரஸ்தாக்கள் போட்டுக்கொள்ள பிரிட்டன் சார்பில் இடாலியும் சேரும். இதுதான் ஒப்பந்தம்.

இடாலிக்குள்ள மற்றொரு ஆசையும் குறிப்பிடத்தக்கது. ஸானு ஏரித்தண்ணீரைச் சிறிதளவாவது நீல நைலுக்கு அணை போட்டுத் திருப்பி இடாலியன் சொமாலியைச் செழிப்புள்ள நாடாக்கினால் இடாலி தொழிற்சாலைகளுக்கு வேண்டிய பருத்தி முழுமையும் கிடைக்கும். இதனால் வருஷத்தில் அயல்நாடுகளுக்குப் போகும் பணத்தில் இருபது லட்சம் பவுன் மீதியாகும். 1906-ம் வருஷம் டிஸம்பர் மாதம் இடாலி, பிரான்சு, பிரிட்டன் என்ற மூன்று தேசங்களும் அபிசீனியாவின் சுதந்திரத்தைப் பாதுகாக்க ஒப்பந்தம்செய்து கொண்டதில் "இம்மூவரில் எவரும் மற்ற இருவரையும் கலக்காமல் எக்காரியமும் அபிசீனியாவில் செய்வதில்லை." என்பது ஒரு நிபந்தனை. இந்த உடன்படிக்கைக்கு விரோதமாக இடாலியும் பிரிட்டனும் முன் சொல்லியது போல் 1925-ல் சதி செய்ததால், பிரான்சு திடுக்கிட்டது, இப்போது அந்த உடன்படிக்கை சீரழிந்துவிட்டது. இடாலி சுயமாகப் பலம் அடைந்து தனக்கு வேண்டிய காரியங்களைத் தானே செய்து கொள்ளத் தைரியம் அடைந்துள்ளது.

இதுவரையில் நாம் தெரிந்துகொண்டதென்ன ? ஜர்மனியும் இடாலியும் புதிய ராஜ்யங்களையடையப் பலம் சேகரிக்கின்றன. பிரான்சு முதலிய மற்ற தேசங்கள் ஜர்மனியை உடைத்தெறியப் பலம் சேகரம் செய்கின்றன. இரண்டு தொகுதிகளும் போட்டி போட்டுப் படைகளை வளர்க்கின்றன. பிரிட்டனுக்கு ஒரு கட்சியிலும் மனப்பூர்வமாகச் சேர எண்ணமில்லை; ஆதலால் யுத்தம் வேண்டாம் என்று விரும்புகிறது. **யுத்தமே வேண்டாம் என்று மனப்பூர்வமாக விரும்பும் தேசம் பிரிட்டன் ஒன்றுதான் என்பதை நாம் மறக்கலாகாது.**

ஆயினும் ஜர்மனியும் இடாலியும் சேர்ந்து ஒரு பக்கமும், பிரான்சு, ருஷ்யா முதலிய பல தேசங்கள் மற்றொரு பக்கமும் யுத்த சன்னர்களாக நிற்கும்போது, மத்திய தரைக்கடலும் ஐரோப்பிய நாடுகளுக்கு அவசியமாகும்போது பிரிட்டன் மௌனம் சாதிக்க முடியவில்லை. எக்கட்சியைச் சேருவதென்ற உறுதியின்றித் தற்காப்பிற்காக மாத்திரமே யுத்த தளவாடங்களையும் யுத்த பயிற்சியையும் பிரிட்டிஷார் விருத்தி செய்து வருகிறார்கள். இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவுக்கும் செல்லும் வழியாக மத்திய தரைக் கடல் இருக்கிறது. அங்கு இடாலியின் நட்பு இருந்தால் நலம். ஆப்பிரிக்காவைப் பற்றிய வரையில் இடாலியை நம்ப முடியவில்லை. கறுப்பு நிறத் துருப்புகளை இடாலியர் தயார் செய்வார்கள். கிழக்கே ஜப்பான் பலம் பெருக்கி நாடுகளையும் பெருக்கி வருகிறது. ஜன நெருக்கமற்ற வட ஆஸ்திரேலியா மீது ஜப்பான் திருஷ்டி பாய்கிறது. இடையில் பசிபிக் கடல் தீவுகளில் பலவற்றில் ஜப்பானுடைய ஆதிக்கம் இப்போதே உண்டு. ஆகவே இயற்கையில் பிரிட்டன் தற்காலம் பிரான்சுடனும் ருஷியாவுடனும் சேரவேண்டுமோ ? இடாலியின் நட்பு இல்லையானல் வேறு துணை தேட வேண்டியது தான். இப்போது இடாலி அபிசீனியா முழுவதையும் கைப்பற்றியபடியால் இடாலியும் பிரிட்டனும் சம பலத்துடன் நண்பர்களாக வேண்டும், இரண்டு தேசங்களும் இந்த அவசியத்தை அறிந்துகொண்டிருக்கின்றன. ஆனாலும்

பிரிட்டன் தன் கடற்படையை விர்த்தி செய்து கொள்ள வேண்டியது அவசியம்.

ஜர்மனி வட கடலில் பிரிட்டனைத் தாக்கச் சக்தி பெறுமாறு ஹேலிகோலந்துக் கருகிலுள்ள தீவுகளைப் பலப்படுத்துகிறது. ருஷியாவின் பலம் எல்லையற்றிருந்தாலும் யுத்தம் நேரும்போது ருஷ்யா மூன்று பலமான எதிரிகளுக்கு வழி சொல்ல வேண்டிவரும். அவைகள் ஜப்பான், ஜர்மனி, ஆஸ்திரியாவும் இடாலியும். இந்த நிலையில் பிரிட்டன் தென்னுப்பிரிகா வழியே சுற்றிவரும் ரஸ்தாவில் கடல் பலத்தைப் பெருக்கி வருகிறது. தென் ஆப்பிரிகாவில் இப்போது ஏராளமான செலவில் கடற்படைத்துறையும் யுத்த விமானசாலைகளும் தயாராகின்றன. இவற்றின்செலவு முழுமையும் பிரிட்டிஷாரைச் சேர்ந்தது. தென் ஆப்பிரிகா இடம் கொடுப்பதோடு சரி. சிங்கப்பூர் துறையைவிட அதிக பலமுள்ள கடற்படைத்துறை அது. ஈஜிப்டுக்குப் பழைய சுதந்திரமளித்ததும் துருக்கிக்கு டார்டினல்ஸ் சம்பந்தமாக உரிமையில் விட்டுக் கொடுத்ததும் சிறந்த அரசியல் தந்திரமேயாகும். அபிசீனிய யுத்தத்தில் பிரிட்டன் இடாலியின் அநீதியைப் பலவந்தமாகத் தடுத்திருக்கவேண்டும். அப்படிச் செய்யாதது பெருந்தவறென்று இப்போது உணரப்படுகிறது. இடாலியின் மிருக பலத்தை இஷ்டம்போல்அபிசீனியாவில் விளையாட விட்டதால்— மிருக பலம்கூட இடாலிக்கு அதிகமில்லை ; யந்திர பலமும் விஷ பலமுமே—ஐரோப்பாவை இப்போது ஹிட்லரும் முஸோலினியும் இஷ்டம்போல் ஆட்டி வைக்கிறார்கள்.

## ஸ்பெயின்

ஸ்பெயின் தேச கலகத்தின் ரகஸ்யம் என்ன ? ஐரோப்பிய தேசங்களுக்கு அங்கு என்ன சம்பந்தம் ? இதைக் கவனித்தால் இரண்டு சர்வாதிகாரிகளின் செல்வாக்கு விளங்கும். 1931-ம் வருஷம் ஸ்பெயின் தேசமன்னர் அல்டான்ஸோ ரகஸ்யமாக ஓடி உயிர்தப்ப வேண்டியிருந்தது. அதுமுதல் இது

வரையில் ஸ்பெயினில் கட்சிச் சண்டைகளும் கலகங்களும் நிறைந்திருந்தன. இப்போதுள்ள கவர்ன்மெண்டு சர்வ ஜன சம்மதமாகச் சமதர்மவாதிகளும் தாராளக் கட்சியினரும் சேர்ந்து அமைந்தது. ஜனசமூகத்தில் மெஜாரிடியார் இந்த அரசாங்கத்தை ஏற்றுக்கொண்டிருந்தும் பலம் மிக்க மைனரிடி கட்சியார் சலகத்தை எழுப்பியிருக்கிறார்கள். சைன்ய பலமும் கலகக்காரர்களுக்கு அதிகமாக உண்டாகியிருப்பதால் மிக்க கொடுமையான பிரஜாயுத்தம் தோன்றிவிட்டது. பிரஜாயுத்தம் அந்நிய தேசங்களுக்கு உபத்திரவமாயிருக்கும் போல் தோன்றினால், இதர அரசாங்கங்கள் ஸ்பெயின் தேச அரசாங்கத்துக்குத் துணை செய்து கலகக்காரரை அடக்க வேண்டியதே நியாயம். அப்படியிருக்க; பிரான்சு முதன் முதல் இதில் கவலை செலுத்தி நடுநிலைமை வகிக்குமாறு ஐரோப்பிய அரசாங்கங்களைக் கேட்டது. ஸ்பானிஷ் அரசாங்கத்தார் வெற்றியடைய வேண்டுமென்ற எண்ணமுள்ள தேசங்கள் நடுநிலைமை வகிக்க விரும்புவானேன்! ஸ்ரீமான்கள் ஹிட்லரும் முஸோலினியும் இச்சந்தர்ப்பத்தில் ஸ்பெயின் கலகக்காரருக்கு உதவி செய்து அங்கு பாஸிஸ்டு கட்சி சர்வாதிகார ஆட்சியை உண்டாக்க விரும்புகிறார்கள். பிரான்சு முதலிய தேசங்கள் ஸ்பெயின் தேச அரசாங்கத்திற்கு உதவி செய்தால் ஜர்மனியும் இடாலியும் கலகக்காரர்களுக்கு வெளிப்படையாக உதவியளித்து வருவார்கள். ஐரோப்பிய யுத்தம் ஏற்பட்டுவிடும். இதற்காக நடுநிலைமை வேண்டப்படுகிறது. ஆதலால் ஜர்மனியும் இடாலியும் ஐரோப்பிய யுத்தத்தை விரும்புகின்றன என்றும் மற்றவை யுத்தத்தை வெறுக்கின்றன என்றும் அறியவேண்டும். இப்போது ஸ்பெயின் கலகத்தில் ஐரோப்பிய நாகரிகத்தின் அநாகரிகத்தன்மை முழுமையும் வெளியாகிறது. தினசரி பத்திரிகைகளில் கொடுமைகளைப்பற்றிக் காண்கிறோம். கலகக்காரர்களுக்கு ரகஸ்யமாக உதவி செல்கின்றது. கலகக்காரர் வெற்றிபெற்றால் இடாலிக்கு மத்திய தரைக் கடலிலும் வடக்கு ஆப்பிரிகாவிலும் அதிக பலம் கலகக்கூட்டத் தலைவர் மூலமாக வாக்களிக்கப்பட்டிருக்கிறது. அபிசீனிய யுத்தத்தில் இடாலி செய்த

அந்நீதிக்கு உடந்தையாகி பிரான்சும் அதன் தாட்சண்யத்திற்காக பிரிட்டனும் சேர்ந்து சர்வ தேச சங்கத்தின் விதிகளைப் பறக்க விட்டதன் பயன் இப்போது ஐரோப்பாவையே கலக்குகிறது. இந்தநிலை நீங்கி அமைதி ஏற்பட வழியுண்டோ?

ஸ்பெயின் தேசத்தில் மேற்கில் சரிபாதி கலகப்படைத் தலைவர் வசம் இருக்கிறது. இடாலியரும் ஜர்மானியரும் தாராளமாக சைன்ய பலமும் யுத்த தளவாடங்களும் கலகப் படைக்கு அனுப்பிவிட்டார்கள். இப்போது எத்தேசமும் ஒரு கட்சிக்கும் உதவி செய்யலாகாது என்ற விதிக்கு அவர்களும் இணங்கலாம். ஏனெனில் ஸ்பானிஷ் அரசாங்கத்திற்கு உதவி செல்லாமலிருக்கும் அல்லவா? ஸ்பெயினில் கலகப்படைத்தலைவர் ராஜ்யமடைந்தால் பாஸிஸ்ட் கட்சிக்கு ஜெயமாகும். மத்திய தரைக் கடலில் **பெலியாரிக்** தீவுகளும் ஆப்பிரிகாவிற்கருகில் மேற்கில் **கானரி** தீவுகளும் பாஸிஸ்டு கட்சியின் அரண்களாகும். பிரிட்டிஷார் மத்தியதரைக் கடல் பலத்திற்குப் பலவீனம் ஏற்படும். ஆதலால் பிரிட்டிஷ அரசாங்கத்தார் மத்திய தரைக் கடலில் தமது கடற்படையை விர்த்தி செய்திருக்கின்றனர். ஈஜிப்டுக்குப் பூர்ண சுதந்திரமளித்து அத்தேசத்தில் தமக்கு வேண்டிய ராணுவ வசதிகளையும் விமானச் சாலை வசதிகளையும் நிர்மாணித்துக்கொள்ள உரிமை பெற்றனர். அதோடு நின்றுவிடவில்லை. கிழக்கில் துருக்கியையும் கிரீஸ் தேசத்தையும் நட்புகொண்ட தேசங்களாகச் செய்து கொண்டனர். இவ்வளவும் எதற்காக? மத்திய தரைக் கடலில் இடாலி பலமதிகரித்துக் கொண்டு கிழக்காபிரிகாவிலும் அபிசீனியா முதலிய பெரிய பிரதேசங்களைக் காலனிகளாகச் செய்து கொண்டதற்காக! தற்கால நிலையில் பிரான்சு இடாலியை எதிர்க்க பயப்படும்; ஆதலால் பிரிட்டிஷார் இவ்விதம் பலம் தேடிக்கொள்ள வேண்டியதாகிறது. பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷார் படையனுப்பி அராபியர் கலகத்தை யடக்குவதாகச் சொல்லிக்கொள்வதும் இதற்கென்றே மதிக்கலாம். சூயஸ் கால்வாய்க் கருகில் ஒரு படைபலம் வேண்டுமென்பதே கருத்தாகும். ஆனால் பாலஸ்தீனப் பிரச்

னம் பெரிய சிக்கலாக நிற்கிறது. யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் உண்டாகியிருக்கும் போராட்டத்தைத் தீர்ப்பது தொல்லையாகி விட்டது. இரு சமூகத்தவர்களுக்கும் பிரிட்டிஷார் கொடுத்த வாக்குறுதிகளால் ஏற்பட்ட கஷ்டம் இது. இக்கஷ்டத்தால் பாலஸ்தீனம் பிரிட்டஷாருக்கு நலம் செய்யுமா தீங்கு செய்யுமா என்று சொல்லமுடியாது. மற்றப்படி மத்தியதரைக் கடலில் பிரிட்டிஷார் தங்களுக்கு வேண்டிய அளவு காவல் செய்திருக்கின்றனர். பிரான்சு பிரிட்டனுக்கு உதவி செய்யாவிட்டாலும் மத்திய தரைக் கடலில் எதிரியுடன் சேராமலிருக்குமென்று நம்பலாம். ஆயினும் ஸ்பெயின் தேசத்தில் கலகப்படை முழுமையும் அடக்கப்பட்டு இப்போதுள்ள ஜனநாயக கட்சியே பூர்ண வெற்றியுடன் விளங்கினல் பிரிட்டன் பிரான்சு என்ற இரு தேசங்களுக்கும் உதவியாயிருக்கும். இடாலியின் கடற்படைக்கு அதிக பலம் ஏறாது. இனி ஜப்பானைப் பற்றிச் சில உண்மைகளையறிவோம்.

## ஜப்பான் அவா

'ஜான்புல்' பத்திரிகையில் சர்வ தேச சம்பந்த அரசியல் நிபுணர் ஒருவர் எழுதியதன் சாரம் கவனிக்கத்தக்கது :—

மத்திய தரைக் கடலில் இத்தாலிய முஸோலினி புதிய ரோம ராஜ்யத்தை பயங்கர நிலையில் உற்பத்தி செய்யப் பெரு முயற்சி செய்கிறார். கிழக்குக் கோடியில் மற்றொரு தேசம் இருக்கிறது. கீழ்த்தேசங்களை யெல்லாம் ஜெயித்து ஆட்சி செலுத்தவே தங்களைக் கடவுள் படைத்தார் என்று அத்தேசம் நினைத்துக்கொண்டிருக்கிறது.

ஏன்? உலகம் முழுவதும் ஏன் தனக்குச் சொந்தமாகக் கூடாதென்றும் அது கனவு காண்கிறது. கிழக்கு ஆசியாவிலும் பசிபிக் மகா சமுத்திரத்திலும் யுத்தபயம் அதிகமாயிருப்பதற்கு இதுவே காரணம். அப்படி அந்த இடங்களில் யுத்தம் ஏற்பட்டால் பிரிட்டிஷ் ராஜ்யம் சம்பந்தப்படாமலிருக்க முடியாது. யுத்தம் ஏற்படுவதற்குக் காரணம்,

ஜப்பானது பொருள் நிலையில் அபிவிர்த்தி தேவை என்பதல்ல; ஜப்பானது மததர்மமே யுத்தத்தை அபேட்சித்து வரவேற்கிறது. பொருள் நிலை சீர்திருத்தமாக இருந்தால் சமரசம் செய்து மத்தியஸ்தம் ஏற்படலாம். மதக்கொள்கையில் சமரசமோ மத்தியஸ்தமோ முடியாது.

இதற்குமுன் இல்லாத அளவு அதிக தீவிரமாக, ஜப்பானது ராஜ்ய ஆசை துடித்துக்கொண்டிருக்கிறது. மதவெறிக்குச் சமமாக இதில் அவர்கள் தீவிர உணர்ச்சி காட்டி வருகிறார்கள்.

**சக்கரவர்த்தியே தெய்வம்.**

அஜித்சு-காமி; அதாவது, ஜீவிக்கும் கடவுள் என்று சக்கரவர்த்தி போற்றப்படுகிறார். அவர் காட்டும் வழியே **பிரபஞ்ச ஆணை.** அச் சக்கரவர்த்தியின் திவ்ய ஒளி உலகமெங்கும் சமமாகவும் பட்சபாத மில்லாமலும் பரவுமாறு செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் முழுசிரத்தையுடன் ஜப்பானிய கொள்கைகள் வளர்ந்து வருகின்றன.

ஜப்பானுக்குப் புதிய யுகம் தோற்றுவிக்கக் காரணமாயிருந்தவர்களில் ஒருவரான லார்டு ஹோட்டா பின்வரும் திட்டத்தை எடுத்துரைத்தார் :—

"எல்லா தேசங்களுக்கும் மேலே ஒற்றுமைப் பான்மை வளர்வதற்கு அடிப்படை கோலுவதே எப்போதும் நம் கடமையாகவேண்டும். கட்டுப்பாடு பெருக்கவேண்டும்.

நாம் பலம் பெற்றவுடன் இக்கொள்கைக்கு விரோதமாக நடப்பவரைத் தண்டிக்க வேண்டும். நிரபராதிகளை நாம் ரட்சிப்போம் என்று உறுதி கூறுவோம்.

உலகிலுள்ள தேசங்களெல்லாம் நமது சக்கரவர்த்தியே எல்லோரையும் ஆட்சி செலுத்துகிறவர் என்று கருதும் காலம் வரும். நமது கொள்கையைப் பின்பற்றி நமது தீர்ப்புக்கு அடங்குவார்கள்."

**இவ்விதம் பேசியது 1858-ம் வருஷத்தில்.**

1915-ம் வருஷம், "இருபதாவது நூற்றாண்டின் மத்தியில் ஆசியாகண்டத்து நடுப்பிரதேசத்தில் ஐரோப்பாவும் ஜப்பானும் சந்திக்கும். பிறகு ஐரோப்பியரிடமிருந்து உலக ஆதிக்கத்தை ஜப்பான் அபகரிக்கும்." என்று பிரதம மந்திரி கௌண்டு ஓகுமா தெரிவித்தார். ஐரோப்பாவைப் போல் ஆசியா ஆகுமென்று சொல்லவில்லை.

"கடவுளிடமிருந்து நமக்குக் கிடைத்துள்ள பெரிய உலகத் தொண்டு என்ன? நமது தேச தர்மம் விரிவாக வளரவேண்டும். கீழ்த் தேச ஜன சமூகங்களை விடுவிக்க வேண்டும். வெள்ளைய ராதிக்கத்தினின்று அவர்கள் அடையும் திணறலை ஓட்டவேண்டும்." என்று தளகர்த்தர் தடா (ஜப்பானிய படைத் தலைவர்) எழுதியுள்ளார். இது நிகழ்ந்தது 1936-ல்.

ஆகவே சென்ற எண்பது ஆண்டுகளாக கொள்கை ஜப்பானுக்கு மாறவேயில்லையென்று தெரிகிறது. முன்னேற்ற காலங்களிருந்தன; அமைதியாயிருந்த சமயங்களுமுண்டு; பின்னேட்டமும் ஏற்பட்டதுண்டு. ஆனால் கொள்கையின் தத்துவம் மாறவேயில்லை.

கிழக்கு ஆசியாவை அமுக்கிப் பிடிக்கும் வெள்ளைக்காரரின் செல்வாக்கை நீக்குவது, சீனவை சுதந்திரமடையச் செய்து அதன் ஏராளமான சாதனப் பொருள்களை ஜப்பான் நிர்வாகத்திற்குக் கொண்டு வருவது, முடிவில் உலக ஆதிக்கத்தை ஐரோப்பியரிடமிருந்து பிடுங்குவது. தெய்வ சக்தியுடன் கூடிய சக்கரவர்த்தியின் மேன்மையை எல்லா தேசங்களும் ஒப்புக்கொள்ளுமாறு செய்வது.

இது பைத்தியகாரத்தனமென்று தோன்றலாம். ஜப்பானில் ஆதிக்கம் செலுத்துகிறவர்களும் பாமர ஜனங்களும் கூட, அப்படிச் செய்துகொண்டு போகவே கடவுள் தம்மைப் படைத்ததாக நினைக்கிறார்கள்.

இந்தக் காரியத்தைச் செய்து கொண்டே இறக்கும் ஜப்பானியர்—அவர் நல்லவராயினும் சரி, குற்றவாளியாயினும் சரி—போர் வீரராயினும் சரி, சாமான்ய மனிதனுயினும் சரியே—ஜகத் சக்தியுடன் சேர்ந்து தேசிய தர்மத்தை ரட்சிக்கும் தெய்வமாகிருன் என்று அவர்கள் நம்புகிருர்கள்.

## சீனுப் பிணம்.

துக்ககரமான விஷயம் ஒன்று உண்மையாயிருக்கிறது. வீரியமும் சக்தியும் சிறந்த அணிவகுப்பும் மிக மேலான ராணுவ பலமும் உடைய ஜப்பானே, பொருள் நெருக்கடியாலும் மதவெறியாலும் ராஜ்ய ஆசைப் பேயிடம் அகப்பட்டுத் துடிக்கும் அத்தேசத்தையடுத்துள்ள கடலுக்கப்பால் வேருெரு தேசம் கீழான நிலையில் கிடக்கிறது. உள்நாட்டு பலம் குறைந்து வலியிழந்து எதிர்க்கும் சக்தியற்று ஒரு ராஜ்யம் அங்கே, உறுதியுடன் நெருங்கும் வெற்றி வீரனுக்கு ஏற்ற உணவாக அமைந்திருக்கிறது.

சென்ற நாற்பதாண்டுகளாகவே ஜப்பான் பொறுமையுடன் விடாப் பிடியாக இடைவிடாமல் சீனுவை ஜெயிக்க வேண்டுமென்று முயற்சி செய்துவருகிறது. வெளியிலிருந்து தாக்கியது, உள்நாட்டில் குழப்பம் வளர்த்தது; பலவிதமாக காலத்திற்கேற்றபடி நடந்து வந்தது; சாம தான பேத தண்டோபாயங்களே உபயோகித்தது. மிக ஜாக்கிரதையாகவே சாமார்த்தியத்துடன் இவைகள் உபயோகப்பட்டிருக்கின்றன. இன்னும் முடிவு காணவில்லே. இதுவரையில் தன் ராஜயத்தைக் காட்டிலும் பெரிய பிரதேசங்களேச் சீனுவில் ஜப்பான் தன் ஆதிக்கத்துக்குள் தயார் செய்து கொண்டது. 1895-ம் வருஷத்தில் பார்மோஸாவையும் பெஸ்கடோர்களேயும் 1905-ல் லயோடங் தீபகல்பத்தையும் 1910-ல் கொரியாவையும் சேர்த்துக் கொண்டது. இவைகளெல்லாம் ஆரம்ப வேலேகளே.

## பெரிய முயற்சியில் வெற்றி.

1931-ம் வருஷம் பெரு முயற்சி ஏற்பட்டது. ஐந்து வருஷ காலத்திற்குள் மஞ்சூரியா, ஜிஹோல், சாஹர், என்ற மாகாணங்கள் ஜப்பான் ஆளுகைக்குள் வந்துவிட்டன. ஹோபெய், செயூவான் மாகாணங்களையும் இப்போது கவனித்து வருகிறது. இஷ்டமானபோது இவைகளையும் விழுங்கும்.

ஐரோப்பாவில் அரைப்பங்கு விஸ்தீரணமுள்ள பிரதேசம், ஜர்மனியின் ஜனத்தொகைக்குச் சமமாக ஜனங்களுடன் கூடிய ஒரு ராஜ்யம், ஆசியாவில் பெரிய நகரங்களுள் ஒன்றுடன், ஏராளமான சாதனப் பொருள்கள் நிறைந்ததாய் ஜப்பான் வசமிருக்கிறது.

இந்த மகத்தான திருட்டோடு அபிசீனியாவை முஸோலினி ஜெயித்ததை ஒப்பிட்டால், அது மிக அற்ப கொள்ளையே ஆகும். இவ்வளவும் தான் என்ன? சீனு முழுமையும் ஆதிக்கம் செலுத்தும் முயற்சிக்கு, கிழக்கு ஆசியா மீது ஆதிக்கம் செலுத்த விரும்பும் இச்சைக்கு, இவை அடிப்படைக் காரியங்களே.

அம்முயற்சிகள் ஏற்கனவே தொடங்கிவிட்டன; திட்டங்கள் தயாராகிவிட்டன. மங்கோலியாவுக்குள் புது இடங்களில் பாய்ந்து முன்னே மேற்குத் திக்கில் செல்ல ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இந்தியாவின் வட மேற்கிலுள்ள காஷ்மீரக் கணவாய்களுக்குப் பக்கத்திலுள்ள சிங்கியாங் மாகாணத்திற்குள் ஜப்பான் கவலை செல்லுகிறது. தெற்கே யாங்டிஸ் நதிப் பிரதேசத்தில் ஷாங்ஹாய் நோக்கிச் செல்லவும் திருஷ்டி ஓடுகிறது.

## சூழ்ச்சி பலிக்கிறது.

சீனு தேச அரசாங்கத்தை ஜப்பானியர், தம் நிர்வாகத்திற்குக் கொண்டுவரச் செய்யும் முயற்சி இதுவரையில் நன்ருகப் பலித்து வந்திருக்கிறது. பத்திரிகை நிருபங்கள், பயமுறுத்தல்கள், பிரசாரங்கள் ஆகிய பல வழிகளையும் எப்படியெப்படி எவ்வளவு அளவில் எக்காலங்களில் உபயோகிப்பது

என்று அறிந்து மிகத்திறமாகவே உபயோகித்து வந்திருக்கின்றனர்.

பூகியனிலும், கான்டனிலும் ஜப்பானிய தூதர் வேலை செய்து வருகிறார்கள். வடசீனாவை விழுங்கியாயிற்று; தெற்கு சீனாவை விழுங்கப் பார்க்கிறார்கள்.

மற்ற வல்லரசுகள் ஒதுங்கி நிற்க வேண்டுமென்று அவற்றிற்கு நோட்டீஸ் கொடுத்தாகிவிட்டது. அதாவது என்ன? அவை யுத்தத்திற்குத் தயாராக இல்லாவிட்டால், சீனாவை ஜப்பான் இஷ்டப்படி ஆட்டிவைக்க விட்டுவிடவேண்டும். சீனா தேசம் தன் சுதந்திரத்தை உறுதி செய்து காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் அதற்குத் துணையா யிருந்தாலும் ஜப்பானுக்கு விரோத காரியமாக மதிக்கப்படும்.

சீனாவுடன் பேராசை நின்று விடவில்லை. ஜப்பானிய தந்திரம், பிரசாரம், பணம் முதலியன சயாம் தேசத்திலும் விளையாடுகின்றன. பிரிட்டிஷ் பர்மா ஒரு பக்கமும், பிரஞ்சு இந்தோ சைனா மற்றொரு பக்கமும் தெற்கே மலேயாவும் பலம் பொருந்திய சிங்கப்பூர் துறைமுகமும் அமைந்துள்ள நிலையில் சயாம் தேசமிருக்கிறது.

மௌனமாகவே ஜப்பானிய சக்தி பிலிப்பைன் தீவுகளிலும், டச்சு கிழக்கிந்திய தீவுகளிலும் சென்றுகொண்டிருக்கிறது. ஜப்பானிய வர்த்தகமும் கப்பல்களும் சுறுசுறுப்புடன் அலைந்து கொண்டிருக்கின்றன.

**இதில் ஒரு விசேஷம் கவனிக்கத்தக்கது. வர்த்தகர் எல்லோரும் சைன்யத்திலிருந்து பேன்ஷன் பெற்றவர்கள்; கப்பல் அதிகாரிகளில் பலர் கடற்படையில் தொண்டு செய்தவர்கள்.**

ஜப்பானிய துப்பர்கள் எங்கும் நிறைந்திருப்பதை யறியாத அந்நியரில்லை. பிரிட்டிஷார், பிரஞ்சுக்காரர், டச்சுக்காரர், அமெரிக்க அதிகாரிகள் ஆகிய எல்லாரும் இதைக்

கேட்டு அச்சங்கொள்கிறார்கள்; அதிசயிக்கிறார்கள்; இச் செயல்களெல்லாம் எப்படி முடியுமோ என்று சந்தேகிக்கிறார்கள். ஆசியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையிலுள்ள தீவுகளில் ஜப்பானிய ஏகாதிபத்திய நலன்கள் பரவவேண்டும் என்று கேட்கக் கூடிய காலம் கிட்டும்போலுமென் கிறார்கள்.

அவ்வாறு நேர்ந்தால், அதாவது, பிலிப்பைன் தீவுகளிலும் ஜப்பான் ஆதிக்கம் செலுத்தமுயன்றால், யுத்தம் நிச்சயமென்று அறியலாம். பிரிட்டிஷ் ராஜ்யமும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் வாய் பொத்திக்கொண்டு நின்றுவிடா.

சில வருஷங்களுக்கு முன் இதெல்லாம் கனவாகத் தோன்றியது. இப்போது அவ்வித அலட்சியம் கூடாது. சீனாவில் வெற்றிமேல் வெற்றி வேகமாக ஏற்பட்டிருக்கிறது. சீனா தேசத்து அரசியல் நிலை நொறுங்கிக்கொண்டு எதிர்க்கும் சக்தி மிகவும் பலம் குன்றி வருகிறது. அதனால் சில வருஷங்களில் ஜப்பான் அங்கு நினைத்த காரியத்தை முடித்துவிடலாம். [இது முற்றிலும் உண்மையல்ல.] பிறகு?

நான்கு வருஷங்களுக்கு முன் என்ன நடந்தது? மஞ்சூரியாவுக்குள் ஜப்பான் பாய்வதைத் தடுப்பது அறிவீனமென்றும் அத்தேசத்தோடு ஜப்பான் திருப்தியடைந்துவிடுமென்றும் நம்பியவர்களுண்டு. இப்போது தெற்கே நோக்கிச் செல்லும் ஜப்பானை எவரும் காண்கிறார்கள். தெற்கிலும் மேற்கிலும் பிரவேசம்.

தெற்கு சீனா, பிலிப்பைன் தீவுகள், கிழக்கிந்திய தீவுகள், மலேயா முதலிய நாடுகளில் பயம் சமீபித்து நிற்கிறது; ஆஸ்திரேலியாவுக்குச் சில வருஷங்களில் பயமேற்படலாம். ஜர்மனியிடமிருந்து ஜப்பானுக்குக் கிடைத்த மான்டேடரி தீவுகளாகிய மாரியானஸ் முதலிய ஸ்தலங்களைக் கடற்படை பலத்திற்கேற்றவாறு தயார் செய்கிறார்கள்.

## இப்போது எங்கே பயம் ?

மஞ்சூரியாவுக்கு மேற்கே—மங்கோலியாவில் ஒரு சமயம் யுத்த பயமேற்பட்டது; மீண்டும் ஏற்படலாம்.

மங்கோலியர்களும் அவர்கள் இனத்தைச் சேர்ந்த உஸ்பெக்கு ஜாதியினரும் நான்கு பிரிவாகப் பிரிந்து நிற்கிருர்கள்: மங்கோலிய வகுப்பில் ஒரு பிரிவு ஜப்பானிய நிர்வாகத்திலடங்கிய மஞ்சுகோவில் வசிக்கிறது. உள்-மங்கோலியாவில், பெயரளவில் சீன அரசாங்க அதிகாரத்தின் கீழ், சிறு மன்னராட்சிகளுக்குட்பட்டு மற்ெருரு பகுதி வசிக்கிறது. வெளி-மங்கோலியாவில் சொவியத் ருஷ்யாவின் பாதுகாப்பில் ஜனப்பிரதிநிதி ரிபப்ளிக்காக ஒரு மங்கோலிய கூட்டத்தினர் உண்டு. உஸ்பெக் ஜாதியினர் சொவியத்திற்குச் சொந்தமான ஸைபீரியாவில் வசிக்கிருர்கள்.

தம் மத வெறியை அனுசரித்தும், மங்கோலியர்களை சீன ஆதிக்கத்தினின்றும் ருஷியப் பாதுகாப்பினின்றும் விடுவிக்கவும் ஏகாதிபத்திய வெறிகொண்ட ஜப்பானியர் மங்கோலியாவிற்குள் செல்ல திட்டம் போட்டனர். இது நிறைவேறினல் ஜப்பான் கம்பள வர்த்தகத்திற்கு ஆஸ்திரேலியாவை நம்பியிருக்க வேண்டாம். மங்கோலியா வழியாக மேற்கில் பாய்ந்து சிங்கியாங் மாகாணத்திற்கு 'விடுதலை' யளித்தால் உலோகப் பொருள்களுக்குப் பஞ்சமிராது. சென்ற இரண்டு வருஷங்களாக மங்கோலிய பூமியில் ஜப்பானும் சொவியத் யூனியனும் மோதிக்கொள்ளக்கூடும் என்ற பயமிருந்தது. இதை உலகம் நன்ருக அறியவில்லை.

வெளி மங்கோலியாவை ஜப்பான் தாக்கினல் அதற்கு உதவி செய்ய ருஷ்யா கட்டுப்பட்டிருக்கிறது. எல்லைப்புறங்களில் சண்டைகள் நடந்திருக்கின்றன. ஜப்பானிய தளகர்த்தர் மிக ஜாக்கிரதையாகவே, தாம் எதிர்ப்பில்லாமல் எவ்வளவு தூரம் செல்லமுடியும் என்று ஆழம் பார்த்துச் சென்ருர். அதற்கேற்றபடி மங்கோலிய எல்லைகளும் தெளிவில்லாமலிருக்கின்றன. மிக

ஜாக்கிரதையாக இந்த விளையாட்டு நடந்து வந்தது. சைன்யம் முன்னே மோப்பம் பிடித்துச் செல்லும்; டோகியோ ராஜ தந்திரிகள் சமயத்திற்கேற்ற சமாதானம் சொல்வதும் மன்னிப்பதும், அவசிய முண்டாகும்போது மன்னிப்பு கேட்பதுமாயிருப்பர்.

இவ்விதம் மாதம் தவருமல் இரண்டு வருஷகாலம் நடைபெற்றது. முடிவு என்ன? கிழக்கு ஸைபீரியாவில் ருஷ்ய படை பலமும் விமான பலமும் பெருகின. மஞ்சூரிய ஜாதியார் மூலமாக மங்கோலியர்க்கு உதவி செய்வதாகப் போட்ட வேஷம் ஜப்பானுக்குப் பலிக்கவில்லை. மங்கோலியர், ருஷியாவை வெறுப்பதைவிட அதிகமாகவே ஜப்பானிய முன்னேற்றத்தினிடம் வெறுப்பு கொள்கிறார்கள். ஆதலால் உலகத்தை ஆட்டிவைக்கும் நிலையில் ஏற்படக்கூடிய யுத்தபயம் இப்போது அங்கில்லை. ஜப்பானுக்கோ காத்திருந்து சமயத்தை எதிர்பார்க்கத் தெரியும். புதிய திட்டங்களை யோசிப்பார்கள். தங்கள் லட்சியத்தை மாத்திரம் அவர்கள் மறக்கமாட்டார்கள்.

மங்கோலியாவில் முட்டுக்கட்டை போட்டதும் யுத்த வெறி என்ற நதி தெற்கே பாயத் தொடங்கியது. அங்கே மறுபடியும் மேற்கு நோக்க வேண்டி வரும். ஷெக்ஸியிலும் கான்சுவிலும் உள்ள சீனப் பொதுவுடைமைச் சைன்யம் பலமானது. அச்சைன்யம் துரத்தப்பட்டால், அது மங்கோலிய எல்லைக்குச்சென்று சோவியத் உதவியை நாடும். இவ்விதம் சீனுவிற்குள் விளையாடி வரும்போது ருஷ்யாவுடனே அல்லது பிரிட்டிஷ் ராஜ்யத்துடனே சச்சரவு ஏற்படக் கூடும்.

## கட்சிகளின் சேர்க்கை

ஜர்மனி, இடாலி, ஜபான் ஆகிய மூன்று தேசங்களைப் பற்றிய நிலையை இதுவரையில் ஆராய்ந்தோம். இந்த மூன்றும் உணவுப் பொருளுக்காக ராஜ்யாபேட்சையடைய வேண்டிய அவசியம் கொண்டவை. உடமையற்ற (Have-nots)

தேசங்களென்று சொல்லப்படும் வல்லரசுகள். இவற்றிற்கு எதிரிகளாக பிரிட்டன், பிரான்சு, ருஷயா முதலிய வல்லரசுகள் நிற்கின்றன. இந்த இரண்டு கூட்டங்களே உலகில் யுத்த சம்பந்தமாக முக்கியமானவை. ஐரோப்பாவிலும் ஆசியா கண்டத்திலும் சுதந்திரம் பெற்ற இதர சிறு தேசங்களை மேலே கூறப்பட்டவைகள் தம்தம் கட்சிகளுக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயற்சி செய்கின்றன. இம்முயற்சிகளின் பயனாக தற்காலமிருக்கும் உலக நிலையைச் சுருக்கிக் கூறி முடித்தலே தகுதி. நிலைமை தினந்தோறும் மாறிக் கொண்டே வருவதால் விரிவாக எழுதவேண்டிய அவசியமில்லை.

மகா யுத்தம் முடிந்தவுடன் ஜர்மனி ஒரு பாடம் கற்றுக் கொண்டது. ஜப்பான் தனக்குத் துணையாக நின்றால் அபகீர்த்தி ஏற்பட்டிராதென்று உணர்ந்தது. ஆதலால் முடியுமானால் ஜப்பானுடன் நட்புகொண்டு ருஷ்யாவை முறியடிக்க வேண்டும். இந்த எண்ணத்தால் முற்றிய நிலைமை 1936-ம் வருஷம் நவம்பர் மாதம் ஏற்பட்ட ஜர்மன்-ஜப்பான் உடன்படிக்கை. இவ்வுடன்படிக்கையின் ரகஸ்யம் முழுவதும் வெளிப்பட்டதாகத் தெரியவில்லை. ருஷ்யாவை ஒடுக்க வேண்டுமென்று ஏற்பட்டது போலத் தோற்றம். ஆயினும் வேறு தேசங்களோடு யுத்தம் நேர்ந்தாலும் இவைகள் ஒன்றுக் கொன்று எல்லாவிதத்திலும் உதவிசெய்துகொள்ளும். இவ்வுடன்படிக்கையி லடங்கியதாகச் சொல்லப்படும் ஒரு குறிப்பு பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் முக்கியம். பசிபிக் மகா சமுத்திரத்தில் மலேயாவிலிருந்து நியூகினி வரையில் படத்தில் ஒருவிதமாகக் கோடுகிழித்து அதற்கு இருபுறமும் இவ்விரு தேசங்களும் செல்வாக்குப் பிரிவினை செய்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. பசிபிக் சமுத்திர பக்கம் ஜப்பானும் இந்து மகா சமுத்திர பக்கம் ஜர்மனியும் செய்து கொள்ளும் காரியங்களில் ஒன்றுக்கொன்று துணையாகும். வல்லரசுகளின் செல்வாக்கு என்றால் எல்லோருக்கும் கருத்து விளங்கும். ஜப்பானிடம் மாண்டேடரியாக விடப்பட்டுள்ள

ஜர்மன் காலனிகளையும் கூட ஜர்மனி விட்டுக்கொடுக்கிறது. இது உண்மையாயிருந்தால் டச்சுத்தீவுகளில் அமைதியாகவே இந்த வல்லரசுகள் தம் ஆதிக்கம் நிலைபெற முயற்சி செய்யும். இப்பொழுதே சிற்சில இடங்களில் ஜர்மன் குடியிருப்புகள் ஸ்தாபிக்கப்படுகின்றனவாம். ஒரு சமயம் ஜப்பானுக்கும் பிரிட்டனுக்கும் யுத்தம் ஏற்பட்டால் ஜர்மனி ஜப்பானுக்கு உதவி செய்யக் கடமைப்பட்டதாகும். இதையறிந்தே கூடியவரையில் ஜப்பானை விரோதித்துக் கொள்ளாமலிருக்க பிரிட்டன் விரும்புகிறது. ஆயினும் சீன சம்பந்தமாக உணர்ச்சி முற்றி அமெரிக்க ஐக்கிய நாடுகளும் சீனவர்த்தகத்திற்காகப் பிரிட்டனுக்கு உதவி செய்யும்போலிருந்தால் யுத்த மேகங்கள் இங்கே கார்மேகங்களாக காட்டிவிடும். அநேகமாக இந்த நிலை ஏற்படாது.

மத்தியதரைக் கடலைப்பற்றி முன்னமே அறிந்தோம். இடாலி அபிசீனியாவை அபகரித்தபிறகு செங்கடலிலும் பலம் பெற்று நிற்கிறது. பிரான்சு இதற்கு உதவியாக ஒரு சிறு தீவை அங்கே இடாலிக்குக் கொடுத்திருக்கிறது. அத்தீவு இடாலியின் கடல் பலத்தை விர்த்தியாக்க வல்ல அரணாகச் செய்யப்படும். மத்தியதரைக் கடலிலும் செங்கடலிலும் இடாலிக்கு விரோதமாக பிரான்சு செல்லாது. ஆதலால் பிரிட்டன் அங்கு வேறு துணைகளைச் சேர்த்துக் கொண்டதென்றோம். நீலநதி சம்பந்தமாக இடாலி பிரிட்டனுக்குத் துணையாகவே நிற்க சம்மதிப்பதால் இடாலியுடன் பிரிட்டனுக்கு விரோதம் ஏற்படக் காரணமில்லை. ஆயினும் அங்கு யுத்தம் தோன்றி பிரிட்டனும் இடாலியும் எதிரிகளானால் ஜிப்ரால்டரிலும் ஏடனிலும் அதிக கடற்படையை பிரிட்டன் நிறுத்தி இடாலிய கடற்படையை அடைத்துவிடச் சக்தி பெறும். பிறகு சமாதானம் ஏற்படும் வரையில் பிரிட்டிஷ் ராஜ்யத்திற்கு மத்தியதரைக் கடல் வழி உபயோகமில்லாமற் போகும். உலக யுத்தமாக நேர்ந்தால் மாத்திரம் இக்கஷ்டங்கள் ஏற்படக்கூடும். ஆதலால் நீலநதி சம்பந்தமாகவோ வேறுகாரணங்களாலோ இடாலிக்கும் பிரிட்டனுக்கும்

சண்டை நடைபெறக் கூடாதென்று இரண்டு தேசங்களும் கவலை கொள்கின்றன.

மத்திய ஐரோப்பாவில் நாளுக்குநாள் நிலைமை மாறிக் கொண்டு வருகிறது. ஜர்மனியின் ஆசையை முன் கூறினோம். ருஷ்யா தேசம் சைன்ய பலத்தை விர்த்தி செய்து விட்ட படியால் ஜர்மனிக்கு முதலில் அதன்மீது திருஷ்டி செல்ல வில்லை. ஆஸ்டிரியாவிலும் ஜர்மனி இடாலிக்குச் சாதகமான ஓர் ஏற்பாட்டைச் செய்துள்ளது. ஆதலால் முதன்முதல் செக்கோ சிலாவோகியாவிடம் ஜர்மனி பாயக்கூடுமென்று எதிர் பார்க்கிறார்கள். அங்கு சென்றாலும் ருஷ்யா சம்பந்தப்பட வேண்டிவருமாதலால் உலக யுத்தமாகவே பெருகக்கூடும். ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் யுத்தம் நடக்குமாறு செய்தால் ஜர்மனியின் கஷ்டம் குறையும். ருஷ்ய பலம் ஒடுங்கும் வரையில்தான் ஜர்மனிக்கு ஜப்பான் தயவு தேவை. பிறகு ருஷ்யாவைத் தனியே ஜர்மனி கவனிக்க முடியும். ருஷ்யா வின் பலம் ஒடுங்கி ஜப்பானது பலம் வளருமாறு பிரிட்டன் பார்த்திராது. அந்தநிலை ஏற்படாமலிருக்க பிரிட்டனும் பிரான்சும் சேர்ந்து யோசிக்கும். அப்போது ருஷ்யா, பிரான்சு, பிரிட்டன் மூன்றும் ஒரு பக்கமும் ஜர்மனியும் ஜப்பானும் மற்றொரு பக்கமுமாக நிற்கவேண்டி வரும். ஜர்மனியோ ஜப்பானை முற்றிலும் நம்ப முடியாதாகையால் இடாலிக்கு அதிகமாக விட்டுக்கொடுத்து, அத்தேசத்தைத் தன்கட்சியில் சேர்த்துக் கொள்ள விரும்புகிறது. இதைத்தடுக்க பிரான்சு முயற்சி செய்கிறது. இடாலி எக்கட்சியில் சேர்ந்தாலும் சாதக பாகங்கள் கலந்தே நிற்கும். நிலைமை முற்றி வரும் போது இடாலி எப்பக்கம் சாயுமோ? தற்காலம் இருகட்சிகளி லிருந்தும் அது பயன் பெறுகிறது.

ருஷ்யாதேசம் இப்போது ஜப்பான், ஜர்மனி, இடாலி என்ற மூன்று வல்லரசுகள் எதிர்த்தாலும் சமாளித்துக் கொள்ள வல்ல பலத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது. பால்டிக் கடல், கருங்கடல், பசிபிக் மகாசமுத்திரம் (ஆசியா பக்கம்) என்னும் மூன்றிடங்களிலும் பலமான கடற்படைகள்

ருஷ்யாவிற்கு உண்டு. பிரிட்டன் தன் கடற்படைகளை பிரிட்டனைச் சுற்றியும் மத்திய தரைக் கடலிலும் பசிபிக் மகா சமுத்திரத்தில் சிங்கப்பூர் துறைமுகத்திலும் நிரவி வைத்துக் கொள்ள வேண்டும். ருஷ்யாவின் கருங்கடல் படை மத்திய தரைக் கடலுக்கும் துணையாகும்.

ஐரோப்பாவைப் பற்றியவரையில் இதோடு நிறுத்திக் கொண்டு சைனாவின் நிலையை நோக்குவோம். ஜப்பானைப்பற்றிக்கவனித்தபோது சைனாவை யறிந்தோம். ஆசியா கண்டத்தில் மற்ற வல்லரசுகள் ஆதிக்கம் பெறாமல் தடைசெய்வதில் ஜப்பான் சிறிதும் பின்வாங்காது. இக்காரியத்தில் அரசியல் தந்திரம் மிகத்திறமாக நடைபெறுவதைக் காண்கிறோம். வட சீனாவில் பல மாகாணங்களையும் சுய ஆட்சி பெறுமாறு செய்து ருஷ்யாவின் பலத்தைத் தடுப்பதுடன் சீனாவும் பெரிய ராஜ்யமாகிப் பலம்பெற்று நிற்கமுடியாமல் ஜப்பான் செய்கிறது. இதனால் சீனா தேசத்தில் ஜப்பானியருக்கு விரோதமான உணர்ச்சி பலமாக உண்டு. இதைப் பயன் படுத்திக் கொள்ள மற்ற வல்லரசுகள் முயற்சித்தாலும் சீனாவுக்காக ஜப்பானுடன் போர் செய்ய எவரும் முன்வரமாட்டார்கள். பசிபிக் மகாசமுத்திரத்தில் ஜப்பானுடன் போர் செய்து வெற்றிபெறுவது கஷ்டம். ஜப்பான் முன்போல் ருஷ்யாவுடன் போர் செய்யும் ஆசையை விட்டொழித்து அமைதியான வழியில் சச்சரவுகளை நீக்கிக் கொள்ள முயற்சி செய்து வருகிறது. சீனா தேசத்திற்குள் மாத்திரம் ஆதிக்கம் செலுத்தவேண்டுமென்ற எண்ணம் ஜப்பானை விட்டொழியவில்லை. பிரிட்டிஷார் தங்களுடைய ஆசியா ஆஸ்டிரேலியா கண்ட நாடுகளுக்காகக் கவலை கொண்டு சீனர்களுக்கு உதவிசெய்ய மனங்கொண்டாலும் யுத்தம் வரையில் செல்ல அவர்கள் தற்காலம் விரும்பவில்லை. ஜப்பானைச் சம்பந்தப் படுத்தி உலக யுத்தம் நேர்ந்தால் அப்போது சீனாவுக்கு வல்லரசுகளின் பலம் கிடைத்து ஜப்பான் அங்கு தொல்லை செய்ய முடியாமற் போகக் கூடும். ஆனால் ஜப்பான் பசிபிக் மகாசமுத்திர தீவுகளில் அதிக பலம் பெற்றுவிடும். இதை பிரிட்டனும்

அமெரிக்க ஐக்கிய நாடுகளும் விரும்பா. சீனவில் குடியரசு ஏற்பட்ட பிறகு அது தன் பலத்தையும் தன் பிரஜைகளுக்குள் ஒற்றுமையையும் வளர்ப்பதற்கு இடையூருக நிற்பது ஜப்பான் ஒன்று தான். நாளாவட்டத்தில் சீனத் தலைவர்கள் மிகவும் தந்திரமாகவும் சாமார்த்தியமாகவும் தம் தேசமுன்னேற்றத்திற்கு உழைத்து வருகிறுர்கள்.

இந்நூலில் ஆதியில் நாம் கூறியபடி ஒவ்வொரு தேசமும் யுத்தத்தை விரும்பாமலே மகாயுத்தத்திற்குப் படை சேர்த்து வருகிறது. நாகரிகம் பெற்ற தேசங்களில் சராசரி ஒவ்வொருவருக்கும் ஆயுள் பரியந்தம் வேண்டிய **உணவுப் பொருள்கள் எட்டு டன்** எடையென்று சொல்லப்படுகிறது. இதை ரட்சிக்க ஒவ்வொருவருக்கும் **பத்து டன்** வீதம் யுத்த **தளவாடங்கள்** செய்யப்பட்டிருக்கின்றனவாம். யுத்தம் வெடித்தே தீரும். ஆயினும் ஐரோப்பிய அரசாங்கங்கள் தப் ஜனசமூகங்களிடம் உண்மை நிலை பரவுவதைத் தடை செய்யாமலிருந்து சர்வதேச ஜனசமூகங்களும் ஒத்து வேலை செய்ய முடியுமானல் ஆயுதப்பரிஹாரணம் பலித்து யுத்தம் வராமலிருக்கும்.

உலக யுத்தம் நேர்ந்தால் வல்லரசுகளின் நிலை எவ்வாறு ஆகும் என்பதை அனுமானத்தால் ஸ்ரீமான் தாரகநாத்தாஸ் 'மாடரன் ரிவ்யூ' பத்திரிகையில் தெரிவிக்கிறுர். அதன் கருத்தைச் சுருக்கமாகத் தருவது தகும்:—

ஜப்பானுக்கும் ஜர்மனிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் முதற்பயன் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் நட்பு வலுத்தது. பிரான்சையாவது பெல்ஜியத்தையாவது ஜர்மனி தாக்கினல் பிரிட்டன் இவர்கள் கட்சியில் சேரும். அப்போது பிரிட்டன், பிரான்சு, ருஷ்யா ஆகிய மூன்றும் ஒரு பக்கம்; ஜர்மனி, ஜப்பான், இடாலி ஆகிய மூன்றும் மற்றொரு பக்கம் நிற்கும். இடாலி ஜர்மனி பக்கம் சேர்ந்தால் பிரான்சைக்கண்டு ஜர்மனி பயப்படவேண்டியதில்லை. பிரஞ்சு படைகளை இடாலி தன் எல்லையில் நிறுத்தும். இந்த நிலையில் பிரிட்டிஷ் கடற்படை ஜர்மனியின் கடற்படையை வடகடலில் தடைசெய்ய வேண்டி

வரும். ஆனல் மத்தியதரைக் கடலிலும் ஈஜிப்டிலும் ஆசியா மைனரிலும் பிரிட்டனுக்குத் தொல்லைகளேற்படும். பாலஸ்தீனத்தில் அராபியர்களைக் கலகம் செய்யுமாறு இடாலியும் ஜர்மனியும் தூண்டிவிட்டு அவர்களுக்கு உதவியும் செய்யும்.

கிழக்கே ருஷ்யாவுக்கும் சீனவுக்கும் ரகஸ்ய ஒப்பந்தமிருப்பதாகத் தெரிகிறது. ஜப்பான் படைகள் சீனருஷ்ய படைகளுடன் சமாளிக்க வேண்டி வரும். ஜப்பான் வசம் அதற்கேற்ற படைகளுண்டு. மேலும் பசிபிக் மகாசமுத்திரத்தில் ருஷ்ய கடற்படையும் பிரிட்டிஷ் கடற்படையும் சேர்ந்து ஜப்பான் கடற்படையை அழிக்க முடியாது. இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் படைகளும் இந்திய படைகளும், சீனவிற்கும் ஆபிரிக்காவிற்கும் செல்லவேண்டிய அவசியம் ஏற்படும்.

இந்த யுத்தத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், வேண்டிய பொருளுதவியும் பசிபிக் மகாசமுத்திரத்தில் கடற்படையுதவியும் செய்யாமற் போனல் பிரிட்டிஷார் கட்சிக்கு கஷ்டமுண்டாகலாம். ஆதலால் பிரிட்டன் இதிலிருந்து தப்புவதற்காக ஜர்மனியுடனும் இடாலியுடனும் சமாதான வழியில் ஏதேனும் பேரம் செய்யக்கூடும். ஜர்மனிக்கு பிரான்சு மீது இப்போது கண்ணில்லை யாதலால் மேற்கில் அதிக கஷ்டம் ஏற்படாது. மத்தியதரைக்கடலில் பிரிட்டனுக்கு வேண்டிய சாதனங்களை இடாலி கொடுக்கச் சம்மதித்தால் பிரிட்டன் கவலை கொள்ளாமலிருக்க முடியும்.

உலகயுத்தம் நேரும் சமயத்தில் ஜப்பான் சீனவில் அதிக பலத்தையும் ஆதிக்கத்தையும் பெருக்கிக்கொள்ளும். ருஷியா தேசம் ஜப்பானுடன் சமரஸம் செய்துகொள்ள முடியுமானல் ஜப்பான் வடசீனவிலிருந்து தெற்கு நோக்கி வியாபிக்கும். அதன் பயனக ஜப்பானுடைய தரைப் பலம் எல்லையில்லாமல் பெருகும். ஆதலால் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன் ஆகிய இரண்டும் ருஷ்யாவுடன் சேர்ந்து சீனவுக்கு பலமளித்து ஜப்பானுக்கு இடையூறு செய்ய வேண்டிவரும். உலகில் தற்காலம் ஜப்பானும் ஜர்மனியுமே அதிக பலம் பெற வேண்டு

மென்று விரும்பும் தேசங்கள். ஐரோப்பாவில் ஜர்மனி மிக மிஞ்சிய பலம் பெருமல் ஐரோப்பிய வல்லரசுகளை தடை செய்யும். ஜப்பானைத் தடைசெய்ய அமெரிக்க ஐக்கிய நாடுகளும் சேரவேண்டும். பிரிட்டனும் அமெரிக்காவும் கலந்தாலோசிக்கும். ஜர்மனி ஆதியில் நினைத்தது போல் தனக்கு இப்போது முடியாதென்றறிந்து சமயம் நேரும்போதெல்லாம் தந்திரத்தால் வெல்கிறது. இடாலியும் கிழக்காப்பிரிக்காவை பலப்படுத்திக் கொண்டால் போதுமென்று கருதுகிறது. ஜப்பான் மாத்திரம் சீனாவில் ஆதிக்கம் செலுத்தும் எண்ணத்தை விடவில்லை. தந்திரத்தால் முடியாவிட்டால் யுத்தம் வரையில் தயாராகும். உலக அமைதிக்காக அறிஞர் ஆலோசனை நடத்துகிருர்கள். அவர்கள் ஆலோசனை முடிவதற்குள் யுத்தம் ஏற்பட்டுவிடலாம்.

உலக யுத்தம் வேண்டாமென்று கருதும் தேசங்கள் உறுதியுடன் ஒன்றுபட்டுச் சர்வதேச சங்கத்தின் மூலமாக உலக அமைதியைக் காத்து சங்கத்தில் சேர்ந்ததும் சேராததுமான தேசங்களுக்கு சங்க விதிப்படி நீதி செலுத்த முன்வரவேண்டும். அப்போது சர்வதேச ஆயுத பரிஹரணம் சித்தித்து நிரந்தர சமாதானம் நிலைக்கும். அந்நிலையை நாம் வரவேற்போம்.

---

Printed at Sethuram Press, 12 Anderson St., G. T., Madras.

## ஹரிஜன மலர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஹரிஜன சேவை | ... 0 | 0 | 6 |
| 2. | ஹரிஜனத் தொண்டு | ... 0 | 0 | 6 |
| 3. | ஹரிஜனப் பணி | ... 0 | 0 | 6 |
| 4. | ஹரிஜன விமோசனம் | ... 0 | 0 | 6 |

இந்நான்கும் 1932-33 வருஷங்களில் மகாத்மா காந்தி இக்கிளர்ச்சியைப் பலமாக நடத்தியபோது வெளியிட்ட சில கருத்துக்களைக் கொண்டவை. நான்கும் சேர்ந்து ஒரு செட் விலை ரூ 0 1 6.





## ஜின்டான் மாத்திரை

## அதிமேலானவை

ஸகலவிதமான தோஷங்களுக்கும், ஸகல ஆரோக்கியத்துக்கும், ஸகல ஆனந்தத்திற்கும் இவையே அன்றி வேறுண்டோ? குணம் அதிகம், விலை சுவல்பம். எக்காலத்திலும் யாவராலும் கொண்டாடப் பெற்றவை.

*Sole agents :—*

S. VAIDYA & Co.,

12. ANDERSON St.,

G. T. MADRAS.